

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT

# 2013

Since 1872

## සී/ස කොළඹ කොමර්ෂල් පොහොර සමාගම
## வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி
## COLOMBO COMMERCIAL FERTILIZERS LTD

# வருடாந்த ஆண்டறிக்கை

# 2013

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி
தலுபிட்டிய வீதி,ஹுணுபிட்டிய, வத்தளை.

தொலைபேசி : 011-2948102/03, 011-2941859
பெக்ஸ் : 011-2930252, 011-2949126
ஈ மெயில் : ccffinance@yahoo.com

## தூர நோக்கு

“கமநலத்திற்கு அவசியமான பொருட்களையும் சேவைகளையும்

தாமதமின்றி உற்பத்தி செய்து விநியோகிப்பதில்

இலங்கை கமநலத் துறைக்கு சாதகமான முறையில்

பங்களிப்பைச் செலுத்துவதன் மூலம்

அரசாங்கத் துறையில் உள்ள முன்மாதிரியான நிறுவனமாக செயற்படுதல்.”

## செயற்பணி

இலங்கையில் முன்னணி உர உற்பத்தியாளராகவும்

விநியோகத்தராகவும் திகழ்ந்து

அரசாங்கத்தின் கமநலத்திற்கான தூர நோக்கில்

பெருமைவாய்ந்த உரிமையாளராக

உற்பத்தியைப் பரவலாக்கி,

உயர் தரத்திலான உற்பத்தியை வெளிப்படுத்தி,

நிறுவகத் தரப்பினரின் தேவைப்பாட்டிற்கு ஏற்றவகையில் செயற்பட்டு

சுதந்திர நிறுவகமாக செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதல்

## பண்புக் கூறுகள்

கணக்களிப் பொறுப்பு
செயலாற்றல் வெளிப்பாடுகள்
வெளிப்படைத்தன்மை
சுற்றாடல் பாதுகாப்பு
தரம்
உறுதிவாய்ந்த
ஊக்குவிப்புப் பணம்

## உள்ளடக்கம்

பக்க இல.


**1 கணக்களிப் பொறுப்பு**

1.1 தலைவரின் மீளாய்வு 01
1.2 பணிப்பாளர் சபை 03
1.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு 03
1.4 சிரேஷ்ட முகாமைத்துவ குழு 03
1.5 கூட்டமைப்பு ஆளுகை 03

**2. செயற்பாட்டு வெளிப்பாடுகள்**

2.1 சந்தை நிலவரம் 06
2.2 கம்பனி செயலாற்றல் 06
2.3 நிதி வெளிப்பாடுகளும் எய்தல்களும் 07
2.4 கம்பனியின் வரலாறு 08
2.5 2013.10.31 இல் முடிவுற்ற ஆண்டின் போதான சம்பவங்கள் 09

**3. முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்**

3.1 உற்பத்தி 09
3.2 வியாபார மீளாய்வு 10
3.3 நிறுவகக் கட்டமைப்பு மற்றும் விநியோக வலையமைப்பு 13
3.4 வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் 14
3.5 மனித மூலதன சுட்டிகள் 16
3.6 மனித மூலதன நிதி மீளாய்வு 16
3.7 மனித மூலதன அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டம் 16

**4. நிதி அறிக்கையிடல்**

- பணிப்பாளர் சபையின் மீளாய்வு 17
- பணிப்பாளர் பொறுப்புக் கூற்று 19
- தலைவரினதும் நிதி முகாமையாளர்களினதும் பொறுப்புக் கூற்று 20
- சுதந்திரமான கணக்காய்வாளர் அறிக்கை 21
- விபரமான வருமானக் கூற்று 25
- நிதி நிலைமைக் கூற்று 26
- உரிமை மூலதன மாற்றக் கூற்று 28
- காசுப் பாய்ச்சற் கூற்று 29
- கணக்கீட்டுக் கொள்கைகள் 31
- நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள் 51

**5. கூட்டமைப்புத் தகவல்கள்** 78

# 1. கணக்களிப் பொறுப்பு

## 1.1 தலைவரின் மீளாய்வு

**எய்தல்கள்**

“மஹிந்த சிந்தனை” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகள் சமூகத்திற்கு 35% இற்கு மானிய நெல் உரங்கள் பகிரப்படுவதில் எமது கம்பனி ஈடுபடுகின்றது. நெல் உரங்கள் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கான உரங்களையும் தேசிய உரச் செயலகத்தின் ஏற்பாட்டில் எமது மத்திய களஞ்சியத் தொகுதியூடாகவும் 17 பிராந்திய களஞ்சியங்களினூடாகவும் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2012/13 கணக்காண்டு காலப்பகுதியின் போது கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி சகல மூன்று வகையிலுமான 124,800 மெட்ரிக் தொன் உரங்களை (யூரியா, ரீஎஸ்பீ மற்றும் எம்ஓபீ) இறக்குமதி செய்துள்ளதுடன் இதே காலப்பகுதியின் போது 129,000 மெட்ரிக் தொன் உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மீளாய்வுக் காலப்பகுதியின் போது கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் புரள்வு ரூபா 867 மில்லியனானமை ரூபா 123 மில்லியன் தொகையான வரிக்குப் பின்னரான தேறிய இலாபத்தை உருவாக்கியது

**திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நிதியாண்டின் போது ரூபா 58 மில்லியன் தொகையான வருமான வரியைச் செலுத்துவதற்கு கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி மதிப்பிட்டிருந்தது.

**பங்கிலாபங்கள்**

2012/13 கணக்காண்டு காலப்பகுதியின் போது கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி திரண்ட நிதியத்திற்கு ரூபா 10 மில்லியனை பங்கிலாபக் கொடுப்பனவாகப் பொதுத் திறைசேரிக்கு பங்களிப்புச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளதில் பெருமிதம் கொள்கின்றது.

**கணக்காய்வு அறிக்கை**

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அறிக்கை 21 ஆம் பக்கம் முதல் 24 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளது.

**நிதி அறிக்கைகள்**

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 25 ஆம் பக்கம் முதல் 30 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளது.

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் கையாளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 31 ஆம் பக்கம் முதல் 50 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளது.

**எதிர்காலப் பாங்கு**

எதிர்வரும் நிதியாண்டின் போது ஹுணுப்பிட்டிய வளாகத்திலுள்ள 25,000 சதுர அடி நிலப்பரப்பைக் கொண்ட களஞ்சியம் மற்றும் சகல நவீன உபகரண வசதிகளுடனான 10,000 சதுர அடி நிலப்பரப்பிலான அலுவலகக் கட்டிடத்தை நிறைவு செய்வதற்கு கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி எதிர்பார்த்துள்ளது. இம் முழுச் செயற்திட்டத்திற்கும் எமது நிதியங்களிலிருந்து பங்களிப்புச் செய்யப்படுகின்றது. களஞ்சியத்தைத் தற்போதைய கட்டிட அலுவலகமாக மாற்றப்பட்டுள்ள சூழலிலும் பார்க்க சிறந்த தொழிற்பாட்டுச் சுற்றாடலை எமது உத்தியோகத்தர்களும் வாடிக்கையாளர்களும் பெற்றுக்கொள்வர்.

மேலும், புதிய துறைமுகத்தின் சகல வசதிகளையும் பயன்படுத்தி கொழும்புத் துறைமுகத்தின் நெருக்கடி நிலையைக் குறைத்து தெற்கில் உள்ள விவசாயிகள் சமூகத்திற்கு அண்மித்த சபையில் போக்குவரத்துக் கிரயத்தைக் குறைக்கும் நுட்பத்தில் மாகந்தொட்ட மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்திற்கு அண்மையில் உரத்தைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஓர் களஞ்சிய அறையை நிர்மாணிப்பதற்கு கம்பனி திட்டமிட்டுள்ளது.

**நன்றி நவிலல்கள்**

கம்பனியின் இலக்குகளை எய்துவதற்கு உதவியதோடு எமது திட்டங்களையும் தந்திரோபாயங்களையும் ஆக்கபூர்வமான முறையில் அமுலாக்குவதற்காகக் கடும் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் பொறுப்புகளையும் நல்கிய சிரேஷ்ட முகாமையாளர்களுக்கும், நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும், எழுதுவினைஞர்களுக்கும் அதனோடிணைந்த உத்தியோகத்தர்களுக்கும் சகல ஊழியர்களுக்கும் இத் தருணத்தில் சபையின் சார்பாக, நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பணிப்பாளர் சபையால் எனக்களிக்கப்பட்ட ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் நான் பாராட்டுகின்றேன். எந்தவித முறைப்பாடுகளோ அல்லது குறைபாடுகளோ இன்றி விநியோக நிகழச்சித்திட்டத்தின் சுமூகமான நிலைக்காக உரக் கொள்வனவுத் திட்டம் தொடர்பாக குறிப்பாக பணிப்பாளர், தேசிய உரங்கள் செயலகம் மற்றும் அவரது உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட தொடர்ச்சியான உதவிக்காகவும், துணை மற்றும் வழிகாட்டலுக்கு குறிப்பாக நான் இச் சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திறைசேரிச் செயற்பாடுகள் பிரிவின் பணிப்பாளர் நாயகத்திற்கும், அபிவிருத்தி நிதிப் பிரிவின் பணிப்பாளர் நாயகத்திற்கும், அவர்களது பதவியணியினருக்கும் எமது கடன் கடித முறிகளை உரிய நேரத்தில் தீர்ப்பதற்கு உதவியளித்தமைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இறக்குமதிகளுக்காக கடன் கடிதத்தைத் தயாரிப்பதற்கு கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனிக்கு வசதிகளை வழங்கிய மக்கள் வங்கித் தலைவருக்கும் கூட்டமைப்புப் பிரிவினதும் வத்தளைக் கிளையினதும் உத்தியோகத்தர்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கம்பனியின் நலன்பெறுனர்கள் ஒவ்வொருவருக்கும் இக் கம்பனியின் பௌதீக மற்றும் நிதிரீதியான அவர்களது பங்களிப்பிற்கு எனது நன்றிகள் உரித்தாகின்றன.

இலங்கை விவசாயிகளினதும் பொதுவாக சகல இலங்கை வாழ் மக்களினதும் நலனுக்கும் எமது கடமைகளை மேற்கொள்வதற்கு அவசியமான உதவிகளை வழங்கி, பெறுமதியான வழிகாட்டல்களை வழங்கிய நாடெங்கிலும் உள்ள கமநல சேவை நிலையங்களின் உத்தியோகத்தர்கள், கமநல சேவைகள ஆணையாளர் நாயகம் மற்றும் விவசாய அமைச்சின் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அமைச்சின் செயலாளர்களுக்கும் அமைச்சின் சகல உத்தியோகத்தர்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

என்.எஸ்.எம். சம்சுதீன்
(சட்டத்தரணி)
தலைவர்
வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி

## 1.2 பணிப்பாளர் சபை

| வகை | பணிப்பாளரின் பெயர் |
|---|---|
| தலைவர் | திரு. என்.எஸ்.எம். சம்சுதீன் (சட்டத்தரணி) |
| நிறைவேற்றுப் பணிப்பாளர் | திரு. டீ.விஜயரத்ன |
| பணிப்பாளர் | திரு. ரோஹன அல்விஸ் |
| பணிப்பாளர் | திரு. என்.பீ. அமரதுங்க |
| பணிப்பாளர் | திருமதி. பிரியங்கனி லியனகே |
| பணிப்பாளர் | திரு. எஸ்.எம்.டபிள்யூ. கோரஸகல (சட்டத்தரணி) |
| பணிப்பாளர் | திரு.ரீ.எம்.கே. தென்னகோன் (சட்டத்தரணி) |
| கம்பனி செயலாளர் | திரு. எஸ்பீ. மொறவக்க (சட்டத்தரணி) |

## 1.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. பிரியங்கனி லியனகே | தலைவர் |
| 2. | திரு. ரோஹன அல்விஸ் | உறுப்பினர் |
| 3. | திரு. எச்.ஏ.வீ.பீ ஹபன்கம | உறுப்பினர் |
| 4. | திரு.கே.பீ.விமலசிறி | உறுப்பினர் |
| 5. | திருமதி. ஏ.பீ.ஜீ.அத்துகோரல | பார்வையாளர் |

## 1.4 சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

| | | |
|---|---|---|
| 1. | திரு. எச்.என்.ஆரியதாஸ | நிதி முகாமையாளர் |
| 2. | திரு. கே.கே. சோமசுந்தரம் | வழங்கல் மற்றும் கப்பற்துறை முகாமையாளர் |
| 3. | திரு. ஜே.சீ.விக்ரமசிங்ஹ | வேலை முகாமையாளர் |
| 4. | திரு.வை.ஏ.டீ.பேர்சி விஜேரத்ன | விநியோக முகாமையாளர் |
| 5. | திரு. எச்.வீ.ஏ.ஜே விஜேசிறி | சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர் |

## 1.5 கூட்டமைப்பு ஆளுகை

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி அரச அரசியல் மற்றும் கொள்கை வழிமுறைகளை அமுலாக்குவதில் உறுதியான வெளிவாரிப் பொறிமுறைகளையும் மிகவும் சிக்கலான ஒழுங்கமைப்புச் சுற்றாடலின் மத்தியில் இயங்குகின்றது. தனியார் துறையில் காணப்பட்ட உறுதியான நேரடி நிதி நிலையுடன் பங்குதாரர்களின் குறுகிய நலனிற்கு வரையறுக்கப்படாது தேசிய முக்கியத்துவத்தின் பொதுக் கொள்கையுடன் தொடர்பான பாரிய பிரச்சனைகளை உறுதியான கூட்டமைப்பு ஆளுகை உள்ளடக்கியுள்ளது.

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி செயற்படும கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனிகளின் நடவடிக்கைகளும் நடைமுறைகளும் நிறுவகக் கட்டமைப்பு மற்றும் கொள்கையால் நிர்ணயிக்கப்பட்டவையாகும். அரச கொள்கைக் கட்டமைப்பு, அரச நிகழ்ச்சித்திட்டங்கள், உயர் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் மற்றும் சிறந்த கால அடிப்படையிலான இறக்குமதிகள் மற்றும் எமது உற்பத்தியான பசளையின் ஆக்கபூர்வமான விநியோகங்கள் கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி மீதான நடத்தைத் தாக்கங்களிற்கு காரணமான அடிப்படைக் காரணிகளாக அமைந்தன. ஆகையால்

கூட்டமைப்பு ஆளுகை அமைப்புகளையும் நடைமுறைகளையும் நிர்ணயிக்கும் பாரிய காரணியாக ஆக்கபூர்வமான முகாமைத்துவம அமைந்தது.

கொழும்பு கொமர்ஷல் உரங்களில் கூட்டமைப்பு ஆளுகை தனியுடமை வியாபார முயற்சிகளைப் பார்க்கிலும் மிகவும் சிக்கலானதாகவும் சவால் மிக்கதாகவும் காணப்பட்டது. நெற் பயிர்களுக்கு உரங்களை வழங்குவதில் கொழும்பு கொமர்ஷல் உரங்கள் ஈடுபட்டுள்ளமையால் இது மிகவும் அவசியமானதாக உள்ளது. நாட்டின் சகல வீட்டுப் பாவனைகளில் தேவைப்பாட்டிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கமளிக்கும் தேசிய பொருளாதாரத்தின் உபாயமார்க்கத் துறையாவதுடன் இதற்கு மேலதிகமாக எமது செயற்பாடு நாட்டின் உயிர்களுக்கும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் நேரடித் தாக்கத்தை விளைவிக்கின்றது.

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் கூட்டமைப்பு ஆளுகையின் பணிக் கட்டமைப்பு**



## மேற்குறித்த ஆளுகைக் கட்டமைப்பினூடாக பின்வருவனவற்றை கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி எய்தியுள்ளது

**கணக்களிப்பொறுப்பு**

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் பணிப்பாளர் சபை, கம்பனியின் சொத்துக்களையும் பெறுமதியையும் பாதுகாக்கும் அதே வேளை அரசாங்க நோக்கங்களையும் ஏனைய நலன்பெறுனர்களின் தேவைப்பாட்டையும் நிறைவேற்றுவதற்கு இயலுமான சகல நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றது.

**பாங்கு**

முகாமைத்துவத்தின் மீதும் கொழும்பு கொமர்ஷல் உரங்களின் செயற்பாடுகள் மீதும் பொதுத் திறைசேரியினதும் அரச மற்றும் ஏனைய நலன்பெறுனர்களினதும் சிறந்த விருப்பைப் பேணுவதன் பொருட்சி பணிப்பாளர் சபை நிர்வாகத்தை ஆக்கபூர்மாகவும் திறன்படவும் செயற்படுத்துகின்றது.

**வெளிப்படைத்தன்மை**

கம்பனியின் செயற்பாடுகள், நிதி மற்றும் நலன்கள் குறித்த சகல தகவல்களை உரிய நேரத்திலும் துல்லியமான முறையிலும் அரசாங்க அதிகாரிகளுக்கும், ஏனைய நலன்பெறுனர்களுக்கும் சந்தைக்கும் வழங்குவதற்கான சகல முயற்சிகளையும் பணிப்பாளர் சபை எடுத்துவருகின்றது.

**ஊக்குவிப்புக் கொடுப்பனவு**

ஆட்சேர்ப்பு, மேம்படுத்தல் மற்றும் சிறந்த தகைமையுடைய ஆளணியை சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தினராகத் தக்கவைத்துக்கொள்வதற்கான கொள்கையை பணிப்பாளர் சபை கையாள்கின்றது.

## 2. செயற்பாட்டு வெளிப்பாடுகள்

## 2.1 சந்தை நிலவரம்

2005 ஆம் ஆண்டின் மஹிந்த சிந்தனை உர மானியத் திட்ட அமுலாக்கத்துடன் யூரியா, எம்ஓபீ மற்றும் ரீஎஸ்பீ போன்ற முக்கிய நெல் உரங்களை தலா ஒரு மெட்ரிக் தொன்னை ரூபா 7,000 இற்கு நாடெங்கிலும் பகிர்வதனை நோக்காகக் கொண்டிருந்தது. பாரிய அளவு தனியார் துறைக் கம்பனிகளைக் கொண்ட நெல் உரங்களின் திறந்த போட்டிச் சந்தையில் ஒருவருக்கொருவர் உயரிய போட்டியிட்டு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனியுடனும் வரையறுக்கப்பட்ட கொழும்பு உரக் கம்பனியுடனும் தெரிவுசெய்யப்பட்ட அரசுடமையாக்கப்பட்ட சந்தையில் வருகின்றனர். ஏனைய பயிரினங்களுக்கான உரச் சந்தை தனியார் துறைக் கம்பனிகளுக்காக வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் இப் பாரிய செயற்பாடுகளை அமுலாக்குவதற்காக அதன் இரு கம்பனிகளான அதாவது வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனிக்கும் வரையறுக்கப்பட்ட கொழும்பு உரக் கம்பனிக்கும் ஒப்படைத்துள்ளது. கொழும்பு கொமர்ஷல் உரங்களுக்கு சந்தைப் பெறுமதியில் ஏறத்தாழ 35% ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து ஆக்கபூர்வமான போட்டியாளர் என்ற நிலையிலிருந்து திறன்வாய்ந்த இறக்குமதியாளராகவும் விநியோகஸ்தராகவும் கொழும்பு கொமர்ஷல் உரங்களின் சந்தை நிலையும் தந்திரோபாயங்களும் மாற்றம் பெற்றன.

2011 இல் மஹிந்த சிந்தனை நெல் மானிய முறை ஏனைய பயிரினங்களுக்கான உரத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டு தனியார் துறை விற்பனைகளும் அடங்கலாக ஏனைய பயிரின உரங்களுக்கான விலைகளும் தலா ஒரு மெட்ரிக் தொன்னிற்கு ரூபா 24,000 என வரையறுக்கப்பட்டிருந்தது. ஏனைய பயிரின உரங்களின் விற்பனை விலைகளின் வரையறையுடன் சந்தை தந்திரோபாயங்களாக விலைகளின் முக்கியத்துவம் மாற்றம் பெற்று சந்தை ஆக்கத்திறன் புதிய தந்திரோபாயமாகியது.

ஆகையால் விலைப் போரின் சந்தை தந்திரோபாயங்கள் திறமையானதும் ஆக்கபூவுமானதுமான சந்தைத் தந்திரோபாயங்கள் மாற்றம் பெற்றன. இதன் படி கொழும்பு கொமர்ஷல் உரங்களும் தமது தந்திரோபாயங்களைச் சீராக்கின.

## 2.2 கம்பனியின் செயலாற்றல்

2012/13 இல் கம்பனி அதன் விநியோக இலக்குகளையும் ஆண்டிற்காக இலக்கிடப்பட்ட விற்பனைப் புரள்வுகளையும் எய்தியிருந்தது. எப்போதும் காலநிலையே விளைச்சலுக்கான உரங்களின் கேள்வியை முடிவுசெய்யும் காரணியாக அமைகின்றது.

## 2.3 நிதி வெளிப்பாடுகளும் எய்தல்களும்

| | 2012/13 | 2011/12 | 2010/11 | 2009/10 |
|---|---|---|---|---|
| **நிதிச் செயலாற்றல் (ரூபா. 000)** | | | | |
| வருமானம் | 866,809 | 982,118 | 1.070,228 | 916.759 |
| தேறிய நிதிக் கிரயம் | (1,758) | 20,063 | | (223,044) |
| மொத்த இலாபம் | 208,325 | 407,265 | 309.297 | 589,420 |
| வரிக்கு முன்னரான இலாபம் /(நட்டம்) | 181,929 | 314,143 | 326,514 | 106,598 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | 123,183 | 216,412 | 210,630 | 106,598 |
| **நிதி நிலைமை (ரூபா. 000)** | | | | |
| மொத்தச் சொத்துக்கள் | 13,047,192 | 10,847,571 | 14,330,092 | 16968,920 |
| பங்குதாரர்களின் நிதியம் | 1,459.950 | 1,346,767 | 1,131,546 | 414,522 |
| **சாதாரண பங்குகள் பற்றிய தகவல் (ரூபா)** | | | | |
| பங்கொன்றின் உழைப்பு | 12 | 22 | 21 | 10 |
| ஆக்கபூர்வமான பங்கிலாபம் | 1.00 | 1.00 | -- | - |
| தேறிய சொத்துக்கள் | 123 | 115 | | |



## 2.4 கம்பனியின் வரலாறு

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி, பிரித்தானியக் கம்பனியாக 1872 ஆம் ஆண்டின் போது இலங்கையில் தனது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பெரியபிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்டது. 1872 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையான 100 ஆண்டுகளுக்கு இக் கம்பனி இங்கிலாந்தில் தனது தலைமை அலுவலகத்திலிருந்து பிரித்தானியர்களால் முகாமைத்துவம் செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டிருந்தது.

1971 இன் 35 ஆம் இலக்க வியாபார முயற்சிகள் கொள்ளல் அதிகாரச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனி 1976 சனவரி 14 ஆம் திகதி அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனியாக பெயர் மாற்றம் பெற்றது.

- கொள்ளல் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து இக் கம்பனி இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிகளால் முகாமைத்துவம் செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டது.

- 1989 ஒக்டோபர் 04 ஆம் திகதி கொழும்பு கொமர்ஷல் கம்பனியானது 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், வியாபாரப் பொறுப்புகள் அல்லது அரச கூட்டுத்தாபனங்களாக மாற்றப்பட்டு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கம்பனி அதன் மொத்த பங்கு மூலதனமாக 10,000,000 பங்குகளை ஒவ்வொன்றும் ரூபா 10 ஆன ரூபா 100,000,000 வை திறைசேரிச் செயலாளரிற்கு வழங்கியது.

- 1994 யூலையில் கம்பனி அன்றைய அரசாங்கக் கொள்கையின் கீழ் தனியார்மயமாக்கியதுடன் பங்குகளின் 90% ஆனவை தனியார் முகாமைத்துவத்திற்கு மாற்றப்பட்டு எஞ்சிய 10% பொதுத் திறைசேரியில் ஊழியர்களுக்குப் பின்னர் மாற்றம் செய்யும் நோக்குடன் வைக்கப்பட்டிருந்தன.

- பொதுத் திறைசேரிக்கும் தனியார் முகாமைத்துவத்திற்கும் இடையிலான ஒப்பந்த மீறலின் காரணமாக கம்பனியில் ஏற்பட்ட ஊழியர் குழப்பம் காரணமாக 1996 இன் 29 ஆம் இலக்க அரச முயற்சிகளின் புனர் நிர்மாண அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1997 சனவரி 20 அன்று கம்பனியின் பங்குகள் மீண்டும் பொதுத் திறைசேரிக்கு உரித்தாக்கப்பட்டது.

- மீள் உரித்தாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கம்பனியின் நிர்வாகம் ஓர் தகுதிவாய்ந்த அதிகாரியின் கீழ் கொண்டுவரப்பட்டு கம்பனியின் செயற்பாட்டின் கண்காணிப்பு அன்றைய உரிய அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

- 2011 யூன் 10 ஆம் திகதி கம்பனி நிர்வாகத்திற்காகப் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டது

## 2.5 2013.10.31 இல் முடிவுற்ற ஆண்டின் போதான சம்பவங்கள்

- அலுவலகக் கட்டிடம் மற்றும் களஞ்சிய அறைகளின் நிர்மாணப் பணிகள் ஹுணுபிட்டியவில் ஆரம்பமாகின.
- அம்பாந்தோட்டையில் புதிய களஞ்சிய அறைகளின் நிர்மாணிப்பிற்காக ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.
- உள்ளகப் பதவியணியினரின் திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படல்.
- தொழில்முயற்சி மூலவள திட்ட முறைமையை விஸ்தரிக்கும் நோக்குடன் தகவல் தொழிநுட்பத்தின் முன்னேற்றச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல்.
- முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் கம்பனியின் நிரந்தரப் பதவியணித் தேவைப்பாட்டின் நீண்டகால திட்டம் நிறைவேற்றப்படல்.

## 3. முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்

### 3.1 உற்பத்தி

நாட்டின் அபிவிருத்திக்கு அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கே முக்கிய வழிகாட்டியாகும். இக் கொள்கையின் கீழான முக்கிய எய்தல்களில் ஒன்றாக நெல் விளைச்சலை விருத்திசெய்தலும் அமைகின்றது. இம் முக்கிய கொள்கைப் பொதியில் அரசாங்கம் யூரியா, எம்ஓபீ ரீஎஸ்பீ எனும் மூன்று வகையான உரங்களை தலா ஒரு மெட்ரிக் தொன் ரூபா 7,000 இற்குத் தொடர்ந்து விநியோகிப்பதற்கு எண்ணியது.

உரிய ஆராய்ச்சி நிறுவகங்களால் மேற்கொள்ளப்படும் சிபாரிசுடன் பெரும்போக சிறுபோகங்களான இரு போகங்களில் விளை நிலங்களை அடிப்படையாகக் கொண்டு நெற் பயிர்ச்செய்கைக்காக நாட்டின் உரங்களுக்கான தேவைப்பாட்டை தீர்மானிக்கும் அரசாங்கக் கரமாக தேசிய உரங்கள் செயலகமானது திகழ்கின்றது.

ஆகவே மஹிந்த சிந்தனை மானியத் திட்டத்தின் கீழான நெல் உரங்கள் நாடெங்கிலும் 557 ஏஎஸ்சீ வலையமைப்பினூடாக தேசிய உரங்கள் செயலகத்தின் வழிகாட்டலுடன் விநியோகிக்கப்படுகின்றன.

2010 இல் ஏனைய பயிரினங்களுக்கான உரங்களும் மானியத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு தலா ஒரு மெட்ரிக் தொன் ரூபா 24,000 இற்கு விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

**விற்பனை விலைகளை அரசாங்கம் பின்வருமாறு நிர்ணயித்துள்ளது.**

| | |
|---|---|
| மானிய நெல் உரங்கள் | தலா ஒரு மெ. தொன் ரூபா 7,000 |
| மானிய ஏனைய பயிரின நேரடிஉரங்கள் | தலா ஒரு மெ. தொன் ரூபா 24,000 |
| மானிய ஏனைய பயிரின கலப்புஉரங்கள் | தலா ஒரு மெ. தொன் ரூபா 26,000 |

**2012/2013 நிதி ஆண்டிற்கான விற்பனைக் கழிவுகள்**

ஒரு மெ. தொன் கொள்வனவிற்காக தேசிய உரங்கள் செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்டவாறு ஏசீஎஸ் ஆல் வழங்கப்பட்ட கழிவுகள் பின்வரும் அடிப்படையில் காணப்பட்டது.

டீஎப்எஸ் களிலிருந்து மேறகொள்ளப்பட்ட கொள்வனவிற்காக ரூபா 330
ஹுணுப்பிட்டியவிலிருந்து 30 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலுள்ள ஏசீஎஸ் களுக்காக ஹுணுப்பிட்டிய களஞ்சியத் தொகுதியிலிருந்து மேற்கொள்ளப்படும் கொள்வனவிற்காக ரூபா 314
தேசிய உரங்கள் செயலகத்தின் அங்கீகாரத்துடன் ஹுணுப்பிட்டியவிலிருந்தான கொள்வனவிற்காக ரூபா 290

இலங்கையின் நெற்பயிர்ச்செய்கைக்கான இரு பிரதான அரச உர விநியோகஸ்தர்களில் ஒருவராக கொழும்பு கொமர்ஷல் உரங்கள் திகழ்கின்றது. கொழும்பு கொமர்ஷல் உரங்களுக்கு தேசிய உரங்கள் செயலகம் நெற்பயிர்ச்செய்கைக்கான மொத்த நெல் உரங்களின் தேவைப்பாட்டில் ஏறத்தாழ 35% இனை விற்பனை செய்து விநியோகிப்பதற்கு ஒதுக்கியுள்ளது.

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் ஏனைய பயிர் உரங்களில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவையே கையாள்கின்றது.

## 3.2 வியாபார மீளாய்வு

கடந்த இரு ஆண்டுகளின் போதான நெல் மானிய விநியோக ஈடுபாடு மற்றும் ஏனைய உரங்களின் விற்பனைகள் பின்வருமாறாகும்.

| உர வகை | மொத்த அளவு | |
|---|---|---|
| | **2012/13** | **2011/12** |
| யூரியா நெல் | 79,017.350 | 90,593.700 |
| எம்ஓபீ நெல் | 23,269.400 | 27,418.300 |
| ரீஎஸ்பீ நெல் | 26,745.100 | 30,206.550 |
| | - | - |
| யூரியா ஏனைய பயிரினம் | 3,483.658 | 145.200 |
| எம்ஓபீ ஏனைய பயிரினம் | 471.903 | 81.775 |
| ரீஎஸ்பீ பயிரினம் | 1,706.699 | 68.673 |
| அமோனியா சல்பேட் | 15.590 | 0.105 |
| கேசரைட் | 33.407 | 44.203 |
| இரும்பு சல்பேட் | 1.092 | 5.226 |
| கலப்பு உரம் | 41.495 | 83.603 |

### *மாவட்ட ரீதியாக 2012/13 நிதியாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட விற்பனைகள்*

17 உப களஞ்சியங்களில் 24 மாவட்டங்களில் விற்பனைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பின்வரும் வரைபடத்தின் மூலமும் அட்டவணையின் மூலமும் காண்பிக்கப்பட்டவாறு உயர் விற்பனைகள் அம்பாறை மாவட்டத்திலும் குருநாகல் மாவட்டத்திலும் எய்தப்பட்டுள்ளன.



*மாவட்ட ரீதியாக விற்பனை விபரம் (அளவு)*

| மாவட்டம் | உரங்களின் வகை ( மெட்ரிக் தொன்னில்) | | | மொத்தம் (மெ.தொ) |
|---|---|---|---|---|
| | யூரியா | ரீஎஸ்பீ | எம்ஓபீ | |
| கொழும்பு | 3,461 | 1,679 | 611 | **5,751** |
| கம்பஹா | 1,179 | 520 | 498 | **2,197** |
| களுத்துறை | 956 | 484 | 798 | **2,239** |
| கண்டி | 416 | 159 | 135 | **711** |
| மாத்தளை | 1796 | 579 | 494 | **2,870** |
| நுவரெலியா | 241 | 104 | 105 | **450** |
| காலி | 663 | 323 | 567 | **1,554** |
| மாத்தறை | 1,332 | 557 | 841 | **2,730** |
| அம்பாந்தோட்டை | 4,568 | 1,555 | 1,289 | **7,411** |
| குருநாகல் | 8,399 | 2,653 | 2,317 | **13,368** |
| புத்தளம் | 2,160 | 685 | 582 | **3,427** |
| இரத்தினபுரி | 1,415 | 495 | 475 | **2,385** |
| பதுளை | 2,919 | 1,077 | 885 | **4,881** |
| மொனறாகலை | 3,964 | 1,303 | 1,091 | **6,359** |
| அநுராதபுரம் | 13,743 | 4,520 | 3,672 | **21,935** |
| பொலன்னறுவை | 6,680 | 2,218 | 1,862 | **10,760** |
| மட்டக்களப்பு | 2,975 | 1,010 | 818 | **4,803** |
| அம்பாறை | 13,959 | 4,737 | 3,746 | **22,442** |
| திருகோணமலை | 4,790 | 1,566 | 1,200 | **7,556** |
| வவுனியா | 1,809 | 585 | 446 | **2,841** |
| முல்லைத்தீவு | 1,083 | 350 | 277 | **1,710** |
| மன்னார் | 1,967 | 701 | 512 | **3,181** |
| கிளிநொச்சி | 1,839 | 507 | 437 | **2,782** |
| கேகாலை | 186 | 83 | 85 | **354** |
| மொத்தம் | **82,501** | **28,452** | **23,741** | **134,694** |

## 3.3 நிறுவகக் கட்டமைப்பு மற்றும் விநியோக வலையமைப்பு

உரங்களின் விலைகளும் அளவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளமையால் கம்பனியின் நலன், கம்பனியின் நிறுவகக் கட்டமைப்பினதும் விநியோகப் பாதையின் வினைத்திறனிலும் ஆக்கபூர்வத்திலும் தங்கியுள்ளது.

**கொழும்பு கொமர்ஷல் உரங்களின் நிறுவகக் கட்டமைப்பு**



## 3.4 வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்

வழங்கல் சங்கிலி நடவடிக்கைகளின் கீழ் திட்டமிடல், நிறைவேற்றல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் வழங்கல்கள் மற்றும் கப்பற்துறை முகாமையாளரால் மேற்கொள்ளப்படுகின்றது. இவர் உரங்களின் பெறுமதி சேர் பாய்ச்சல்கள் மற்றும் வழங்குனர்கள், கம்பனி, அரச நிறுவனங்களுக்கிடையேயான தொடர்புபட்ட தகவல்களுக்கும் முகாமைத்துவத்தின் கீழ் மட்டத்திற்கும் மேல் மட்டத்திற்கும் பொறுப்புடையவராவார்.

வழங்கல் சங்கிலி உபாயமார்க்கத்தில் கொழும்பு கொமர்ஷல் உரங்களின் விவசாயிகள் சமூகத்திற்கான இறுதிக்கட்ட விநியோகத்தின் போது நுகர்வோர் திருப்தியை உண்டாக்குமுகமாக ஆக்கபூர்வமான முறையில் செயற்படும் சங்கிலிகளின் பிணைப்பை ஏற்படுத்துவதே பிரதான நோக்காகும். இதன் விளைவாக தேவையற்ற செலவினங்களும், நகர்வுகளும் கையாள்கைகளும் அகற்றப்பட்டு சங்கிலி பூராவும் கிரயங்கள் குறைக்கப்பட வேண்டும். ஆக்கபூர்வம் குறைத்தும் பெறுமதி சேர்க்கைக்கும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பாய்ச்சல்**



**பிராந்தியக் களஞ்சியங்களின் விநியோக வலையமைப்பு**



## 3.5 மனித மூலதன சுட்டிகள்

நிறுவனத்தின் ஊழியர்கள் எமது மனிதவள மூலதனமாகக் கருதப்படுகின்றனர். கொழும்பு கொமர்ஷல் உரங்கள் படிப்படியாக எமது பதவியணியை வேலைச் சூழலுக்கான கேள்விக்கேற்ற வகையில் அதிகரித்து வலுப்படுத்திக்கொள்கின்றது.




## 3.6 மனித மூலதன நிதி மீளாய்வு

| ஆண்டு | 2012/13 | 2011/12 | 2010/11 | 2009/10 |
|---|---|---|---|---|
| தலா ஒரு ஊழியருக்கான வருமானம் (ரூபா 000) | 6,719 | 7,497 | 8,994 | 8,113 |
| தலா ஒரு ஊழியருக்கான கிரயம் (ரூபா 000) | 956 | 1,652 | 1,770 | 943 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 129 | 131 | 119 | 113 |

## 3.7 மனித மூலதன அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டம்

| பயிற்சிப் பெயர் | பயிற்சி பெறப்பட்ட நிறுவனங்கள் | பங்கேற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜஎப்ஆர்எஸ் பிரயோகம் | பீ.ஆர்.டீ.சில்வா கம்பனி (பட்டயக் கணக்காளர்கள்) | 06 |
| | | |
| | | |

## 4. நிதி அறிக்கையிடல்

## 4.1 பணிப்பாளர் சபையின் மீளாய்வு

**எமது உற்பத்திப் பொருள்**
நாடெங்கிலுமுள்ள விவசாயச் சமூகத்தினருக்கிடையே எமது சேவை நற்பெயரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக தக்கவைத்துக் கொள்ளும் வகையில் எமது கம்பனி பணியாற்றிவருகின்றது. விவசாயச் சமூகத்தினருக்கு உரிய நேரத்தில் மஹிந்த சிந்தனை நெல் உர மானிய நலனை விஸ்தரிப்பதிலேயே தற்போது எமது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

"கொமர்ஷல் பொஹொர எனும் எமது வியாபாரப் பெயரில் விவசாயிகள் சமூகத்தினரிடையே மிகவும் பிரபல்யமான பெயரை இக் கம்பனி கொண்டுள்ளதுடன் "கொமர்ஷல் பொஹொர எனும் வியாபாரப் பெயரின கீழ் நாடெங்கிலும் 35% ஆன நெல் உரங்களை விநியோகிக்கின்றது. வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் நெற் பயிர்களுக்கு பாரியளவான உரங்களை விநியோகிக்கும் அதேவேளை தேயிலை, தென்னை, மரக்கறி மற்றும் ஏனைய சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கும் குறிப்பிடத்தக்க அளவான உரங்களை விநியோகித்து வருகின்றது.

### எமது வலு
2011 – 2016 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2012 – 2015 இற்கான செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டு விவசாய அமைச்சு மற்றும் தேசிய உரங்கள் செயலகத்தின் உதவியுடன் நாட்டின் மொத்தத் தேசிய உரத் தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த கொள்வனவுத் திட்ட நடைமுறையில் அமுலாக்கப்பட்டு வருகின்றது. விவசாய அமைச்சு மற்றும் தேசிய உரங்கள் செயலகத்தின் உதவியுடன் வருடாந்த விநியோகத் திட்டம் தயாரிக்கப்பட்டு கம்பனியின் சகல நலன்பெறுனர்களுக்கும் திருத்திகரமாக அமுலாக்கப்படுகின்றது.

**ஆண்டின் போதான எமது செயல் வெற்றி**
சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்கள் (IFRS) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (LKAS) இணங்க அவற்றைப் பின்பற்றி நிதி அறிக்கைகளை வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் வெளியிடுகின்றது.

2012/13 ஆம் ஆண்டின் போது கொழும்பு கொமர்ஷல் உரங்கள் ஹுணுபிட்டியவில் 25,000 சதுர அடி நிலப்பரப்பைக் கொண்ட களஞ்சியத்தையும் சகல நவீன வசதிகளுடனான 10,000 சதுர அடி நிலப்பரப்பைக் கொண்ட ஓர் கட்டிடத்தொகுதி நிர்மாணிப்பிலும் ஈடுபட்டிருந்தது. இக் கட்டிடம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சபாநாயகர் கௌரவ திரு. சமல் ராஜபக்ஷ அவர்களால் 2013 ஒக்டோபர் மாதம் திறந்து வைக்கப்பட்டது.

கம்பனியின் நிரந்தரப் பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்கள அங்கீகாரத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது. கம்பனிப் பதவியணியின் உற்பத்தி இயலளவு மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்துமுகமாக குறுங்காலப் பயிற்சி நிகழ்ச்சிநிரற்படுத்துனர்களை கொழும்பு கொமர்ஷல் உரங்கள் ஒழுங்குசெய்துள்ளது.

2012/13 ஆம் ஆண்டின் போது ரூபா மில்லியன் தொகையான தேறிய நடைமுறைச் சொத்துக்களை விஸ்தரிப்பதற்கு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்களிற்கு இயலுமாகக் காணப்பட்டது. குறித்த நிதிக் காலப்பகுதியின் போது கொழும்பு கொமர்ஷல் உரங்கள் இதற்கு முன்னைய 2011/12 ஆம் ஆண்டின் ரூபா 314 மில்லியனுக்கு எதிராக ரூபா 182 மில்லியன் தொகையை வரிக்கு முன்னரான இலாபமாக உழைத்திருந்தது. ரூபா 104 மில்லியன் தொகையான அந்நியசெலாவணியைச் செலுத்த வேண்டியிருந்தன் காரணமாகவே அன்றி கடந்த ஆண்டளவு இலாப எல்லையைப் பெற்றிருக்க முடியும்.

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கருத்துடன் நிதி நிலையை ஆக்கத்திறனுடனும் பயனுறுதியுடனும் கண்காணித்ததன் விளைவாக கடந்த ஆண்டின் ரூபா 20 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 1.8 மில்லியன் தொகையான ஓர் வட்டி மிகையை அடைந்திருந்தது.

**பங்கிலாபங்கள்**
பணிப்பாளர் சபை முதலாவதும் இறுதியுமான பங்கிலாபங்களை 10 மூ ஆகப் பரிந்துரைக்கப்படுவதில் மகிழ்ச்சியடைகின்றது. ஆண்டிற்கான பங்கிலாபக் கொடுப்பனவு ரூபா 10 மில்லியனாகும்.

**எமது எதிர்கால வெளிப்பாடு**
கம்பனி வியாபாரச் சூழல் தேவைப்பாட்டிற்குப் பொருந்தும் வகையிலான தொழில் முயற்சி மூலவள திட்ட முறைமைக்கு பிணைக்கப்பட்ட கணனி வலையமைப்பு முறைமையை அமுலாக்கும் நடைமுறையில் கொழும்பு கொமர்ஷல் உரங்கள் தற்போது செயற்பட்டுவருவதுடன் இச் செயற்பாடானது ஆரம்ப கட்டத்தில் உள்ளதுடன் 2014/2015 நிதியாண்டில் முழு அளவில் பூர்த்தியடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**எமது கூட்டமைப்பு ஆளுகை**
அறிக்கை ஆண்டின் போது 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கமைய சகல பதவியணித் தேவைப்பாடுகளும் பதவி உயர்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சகல கொள்கைத் தீர்மானங்களும் தயாரிக்கப்பட்டு பாரிய உபாயமார்க்கங்கள் சபை அறையில் கலந்துரையாடப்படுகின்றன.செயற்பாட்டு நடவடிக்கைகள் எமது வழிகாட்டல்கள், வழிநடத்தல்கள் மற்றும் மீளாய்வுகளிற்கு உட்பட்டவையாகும்.

மிகவும் நெருங்கிய ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய சகல முக்கிய விடயங்களும் முகாமைத்துவக் குழுவிற்கு திசைமாற்றப்படுகின்றன.

மீளாய்வாண்டின் போது நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. சிரேஷ்ட முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டு வினைத்திறன்வாய்ந்ததும் பயனுறுதிவாய்ந்ததுமான செயற்பாட்டு விளைவுகளை எய்தும் நோக்கில் விபரமான நிகழ்ச்சித்திட்டங்களையும் வேலைத்திட்டத்தையும் தயாரிக்கின்றது.

என். எஸ்.எம்.சம்சுதீன் (சட்டத்தரணி)
***தலைவர்***

திரு.டீ.விஜயரத்ன
***நிறைவேற்றுப் பணிப்பாளர்***

திரு.ரோஹண அல்விஸ்
***பணிப்பாளர்***

திரு.என்.பீ.அமரதுங்க
***பணிப்பாளர்***

திருமதி பிரியங்கனி லியனகே
***பணிப்பாளர்***

திரு.எஸ்.எம்.டபிள்யூ.கொரஸகல (சட்டத்தரணி)
***பணிப்பாளர்***

திரு. ரீ.எம்.கே.தென்னகோன் (சட்டத்தரணி)
***பணிப்பாளர்***

திரு. எஸ்பீ.மொறவக்க (சட்டத்தரணி)
***கம்பனி செயலாளர்***

## பணிப்பாளர் பொறுப்புக் கூற்று

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) மற்றும் 151 ஆம் பிரிவுகளின் கீழான தேவைப்பாட்டிற்கு அமைவாக நிதியாண்டிற்கான கம்பனியின் விபரமான வருமானக் கூற்றையும் நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறான கம்பனியின் உண்மையானதும் நியாயமானதுமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு நிதியாண்டிற்குமான நிதிக்கூற்றுக்களையும் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர்.

148 ஆம் பிரிவின் கீழ், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளமையை நியாயமான துல்லியத்தன்மையுடனும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு அந் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு உடனுக்குடனும் முறையாகவும் மேற்கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்துவது பணிப்பாளர்களது பொறுப்பாகும்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒருமைப்பாட்டிற்கும் குறிக்கோளுக்குமான பொறுப்பை சபை ஏற்றுக்கொள்கின்றது. நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டு நியாயமானதும் வெளிப்படையுமான தீர்ப்புகள் எடுக்கப்பட்டு கொடுக்கல்வாங்கல்களின் வடிவமும் கருப்பொருளும் முறையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தும் பொறுப்பை பணிப்பாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள; (SLFRS), இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அவர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

மேலும், கம்பனி அதிகாரச்சட்டத்தால் தேவையான தகவல்களை நிதிக்கூற்றுக்கள் வழங்குகின்றன.

பணிப்பாளர்கள், கம்பனி பற்றிய தமது அறிவு, முக்கிய செயற்பாடுகள் மற்றும் குறித்த விசாரணைகளின் மூலம் அடுத்துவரும் ஆண்டில் தொடந்து செல்லும் அடிப்படையில் போதிய மூலவளங்கள் உள்ளன என்பது குறித்த அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர்.

பணிப்பாளர்கள், கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நியாயமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் அது தொடர்பாக மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளைக் கண்டறிந்து தடுக்கும் நோக்குடன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை முறைப்படி செயற்படுத்தியுள்ளனர். கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 56(2) ஆம் பிரிவின் தேவைப்பாட்டின் படி தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள பங்கிலாபத்தைப் பகிர்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அப் பகிர்வை அடுத்து கடன் தீர்வுத்திறன் ஆய்வில் திருப்திநிலையில் கம்பனி நிலவும் என்பது குறித்து கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 57 ஆம் பிரிவின் படி, கிடைக்கப்பெற்ற தகவலை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வாளர்களிடமிருந்து தற்போது பரிந்துரைக்கப்பட்ட பங்கிலாபம் தொடர்பான கடன் தீர்வுத்திறன் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பொறுப்புகள் குறித்து கணக்காய்வாளர்களின் அறிக்கை -38 ஆம் பக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

**இணக்கப்பாட்டு அறிக்கை**
நிதி நிலைமை திகதியில் உள்ளவாறு கம்பனி தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய அரசாங்க மற்றும் ஊழியர்களுக்கான சகல நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் தமது சிறந்த அறிவிற்கமைய செலுத்தப்பட்டும் தேவையான சந்தர்ப்பத்தில் ஏற்பாடு செய்யப்பட்டும் உள்ளவதாக பணிப்பாளர்கள் உறுதியளித்துள்ளனர்,

எஸ்.பீ.மொறவக்க
சபையின் கட்டளைக்கமைய
வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள்
செயலாளர்கள்

## தலைவரினதும் நிதி முகாமையாளரினதும் பொறுப்புக் கூற்று

2013 மார்ச் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்களின் நிதிக்கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்.
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டம்.
- பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட கூட்டமைப்பாளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் உரிய முறையலும் தொடர்ச்சியாகவும் நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளில் விளக்கப்பட்டவாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை நாம் உறுதிப்படுத்துகின்றோம். குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் எதுவித மாற்றங்களும் இன்றி பிரயோகிக்கப்பட்டுள்ளன. உயர் தீர்ப்பிலும் சிக்கல்வாய்ந்த விடயங்களுடனும் தொடர்புபட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் மதிப்பீடுகளும் கணக்காய்வுக் குழுவுடனும் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடனும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பாதுகாப்பதற்கும், மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்கும், கணக்கீட்டுப் பதிவேடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை உருவாக்கும் போதும் போதியளவு முறையான கவனத்தை எடுத்துள்ளோம். இவை தொடர்ந்து செல்லும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டுள்ளன. கம்பனி உள்ளகக் கணக்காய்வாளர்களால் காலத்திற்குக் காலம் நடாத்தப்படும் கணக்காய்வுகளின் மூலம் கம்பனியால் உருவாக்கப்பட்ட கொள்கைகளும் கோட்பாடுகளும் தொடர்ந்து பின்பற்றப்பட்டுள்ளமைக்காக நியாயமான உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், உள்ளகக் கட்டுப்பாடுகளிலும் கணக்கீட்டிலும் ஏதேனும் முறைமையால் வழங்கப்படும் உறுதிப்பாட்டை அளவிடுகையில் உள்ளார்ந்த வரையறைகள் காணப்படுகின்றன.

கம்பனியின் கணக்காய்வுக் குழுவானது, கணக்காய்வுகளின் ஆக்கத்திறனை மீளாய்வு செய்து, கணக்காய்வு, உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிதி அறிக்கையிடல் பற்றிய பிரச்சனைகளை உள்ளகக் கணக்காய்வாளர்களுடனும் சுதந்திரமான கணக்காய்வாளர்களுடனும் காலத்திற்குக் காலம் சந்திப்பை நடாத்தி கலந்தாலோசித்து வருகின்றது. சுதந்திரமான கணக்காய்வாளர்களும் உள்ளகக் கணக்காய்வாளர்களும்
கணக்காய்வுக் குழுவினருடன் ஏதேனும் விடயம் குறித்து கலந்தாலோசனைகளை நடாத்துவதற்கு முழுமையான விருப்பிற்குரிய வகையில் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்டன.

.......................................
என். எஸ்.எம்.சம்சுதீன்
***தலைவர்***

.........................................
எச்.என் ஆரியதாஸ
**நிதி முகாமையாளர்**

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.1.2 ஏனைய சட்ட மற்றும் ஒழுக்காற்று தேவைப்பாடுகளுடன் இணங்கல்**

இந் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் 151(2) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தலிலான தாமதம்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012/ 2013 ஆம் ஆண்டின் வரைவு நிதிக்கூற்றுக்கள் 5 மாத கால தாமதத்தின் பின்னர் 2013 நவம்பர் 01 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.2.2 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

கம்பனியின் தலைமை அலுவலகத்திற்காக மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று ரூபா 77.314 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்படுவதற்கான அங்கீகார வேண்டுகையுடன் அமைச்சரவை விஞ்ஞாபனம் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 யூன் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தின் போது கம்பனியின் செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு புதிய கட்டிடத்தின் தேவைப்பாடு இல்லாததாகக் குறிப்பிட்டு இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத் தீர்மானத்திற்கு மாறாக தலைமை அலுவலகத்திற்காக 2012 யூன் 22 ஆம் திகதி மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்படுவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் ரூபா 49.666 மில்லியன் தொகைக்கு ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் தினமாகிய 2013 யூன் 30 வரையில் இந் நிர்மாணிப்பிற்காக ரூபா 38.795 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கம்பனியின் செயற்பாடுகளில் ரூபா 181,928,588 தொகையான வரிக்கு முந்திய தேறிய இலாபம் ஏற்பட்டிருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்காக வரிக்கு முந்திய தேறிய இலாபம் ரூபா 314,143,499 ஆனமையால் நிதிவிளைவில் ரூபா 132,214,911 தொகையான வீழ்ச்சியை காட்டுகின்றது.

**2.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவு பல்வேறு நிலைகளின் கீழ் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கானது | |
|---|---|---|
| | **2013** | **2012** |
| | **ரூபா** | **ரூபா** |
| மொத்த இலாபம் | 208,324,888 | 169,316,076 |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம் | 181,928,588 | 314,143,499 |
| வரிக்குப் பிந்திய தேறிய இலாபம் | 123,182,723 | 216,412,432 |

கம்பனியின் விற்பனைகள் 12 சதவீதத்தால் குறைவடைந்தமையும் நிதிக் கிரயம் 62 ஆல் அதிகரித்தமையும் இலாபம் குறைவடைவதற்கு முக்கிய காரணமாகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 103,676,072 தொகையான நாணய மாற்று நட்டம் ஏற்பட்டிருந்தமையால் விற்பனை விநியோகச் செலவினம் கடந்த ஆண்டைப் பார்க்கிலும் 308 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல வருட காலமாக 08 பிரதேச களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பழுதடைந்த உரப் பைகள் மீளப் பொதிசெய்யும் உடனடி நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெரும்பாலான பிராந்தியக் களஞ்சியங்களில் உர இருப்பிற்காக இயற்கை அனர்த்தங்களால் நேரும் பாதிப்பைக் குறைப்பதற்காக போதிய கவனம் எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(இ) கமநல சேவை நிலையங்களால் பிராந்திய களஞ்சியங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டளைகள் உத்தியோகபூர்வ முத்திரையிடப்பட்டு சான்றுறுதிப்படுத்தப்பட்டிராத சந்தர்ப்பங்களும் கட்டளை சமர்ப்பிக்கப்படாத நிலையில் உரங்களை வழங்கியிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டிருந்தது. ஆகையால் இது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஈ) போக்குவரத்துக் கட்டணம் செலுத்தப்படுகையில் குறித்த தூரத்தைப் பார்க்கிலும் கூடிய அளவிற்கு ரூபா 31,696,909 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டு தனியார் நிறுவகத்திற்கு உரங்களை வழங்கி ரூபா 3,771,411 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தமை போன்ற நிதி ரீதியான நட்டங்களும் இழப்புகளும் மோசடிகளும் ஏற்படுத்தியமையால் கம்பனியின் விற்பனை முகாமையாளர் ஒருவரின் சேவை 2011 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் அந் நிதிரீதியான நட்டத்தை அறிவிடுவதற்கு உள்ளக விசாரணையொன்று மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

**2012 ஆம் ஆண்டின் உரப் போக்குவரத்து ஒப்பந்தம் வழங்கல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கைநூலின் 5 ஆம் அத்தியாயத்தின் 5.4.8 (அ), (ஆ), பந்திகளின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட ஒப்பந்தத் தொகையில் 5 சதவீதத்திற்குக் குறையாத மற்றும் கேள்விக் கால எல்லைக்கு மேலாக 28 நாட்கள் வரை செல்லுபடியாகும் செயலாற்றல் பிணை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் உரப் போக்குவரத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த 02 நிறுவனங்களிடமிருந்து செயலாற்றற் பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கைநூலின் 8 ஆம் அத்தியாயத்தின் 8.9.1 இன் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட சகல ஒப்பந்த சேவை உடன்படிக்கைகளும் முறையான ஒப்பந்த உடன்படிக்கை வரையப்பட்டு கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் 09 போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களுடன் முறையான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடைகள் மற்றும் காரியாலய ஊழியர் அதிகாரச்சட்டத்திற்கு முரணாதல்

(i) அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் 14 வருடாந்த லீவிற்கும் 07 அமைய லீவிற்கும் உரித்துடையவர்களெனச் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், கம்பனியால் ஊழியர்களுக்காக 21 அமைய லீவும் மருத்துவ லீவு 21 நாட்களுமாக 42 லீவுநாட்களுக்கு இடமளிக்கப்பட்டு பெறப்படாத மருத்துவ லீவு நாட்களுக்காக ரூபா 2,851,258 தொகை பதவியணியினருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஊழியருக்காகவும் வேலை செய்த மணித்தியாலங்கள் மற்றும் மேலதிக நேர வேலைகளுக்கான பதிவுகள் வைத்திருப்பதுடன் ஒவ்வொரு ஊழியருக்குமான விபரம் அடங்கிய சம்பளப் பதிவேடு ஒன்று வைத்திருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவியணிக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் எஞ்சிய லீவிற்கான கொடுப்பனவு மேற்கொள்கையில் அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனியின் சகல கொடுப்பனவுகளும் உள்ளடங்கலான மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் மேலதிக நேரக் கொடுப்பனவைக் கணிப்பிட்ட காரணத்தால் குறித்த அளவைப் பார்க்கிலும் அதிகளவில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.4 வாகனப் பாவனை**

கம்பனியின் வாகனம் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் எரிபொருள் சீராக்கக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிராமை, சாரதிகளின் பெயர் மற்றும் கையொப்பங்கள் இடப்பட்டிராமை, ஒரு லீற்றருக்கு ஓடும் தூர அளவைத் தீர்மானிக்காமை, சில ஓட்ட அட்டவணைகளில் பயணித்த உத்தியோகத்தர்கள் மற்றும் கையொப்பம் இன்மை போன்ற விடயங்கள் காரணமாக வாகன ஓட்டம் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கு கம்பனி தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த அறிக்கை சபையில் முன்வைத்தல்**

கம்பனியின் 2011/12 நிதியாண்டிற்கு உரித்தான வருடாந்த அறிக்கை 2014 சனவரி 13 வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கட்டளையைப் பின்பற்றியிராத சந்தர்ப்பங்கள்**

2012 யூலை 05 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவில் கம்பனிக்காக திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட படிப்பண நடைமுறை தயாரிக்கப்படும் தேவைப்பாடு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 வரை அந் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கம்பனித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டியுள்ளது.

(அ) உர விநியோக நடைமுறை
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) கொடுப்பனவு உறுதிச்சீட்டுத் தயாரிப்பு, உறுதிப்படுத்தல், கொடுப்பனவுப் பதிவு

(ஈ) கொள்வனவு

(உ) பதவியணி நிர்வாகம்

எச்.ஏ.எஸ். சுமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.)*

**2013 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று**

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| வருமானம் | 13 | 866,809,058 | 982,118,071 |
| விற்பனைக் கிரயத்தின் மீதான மானியம் | 14 அ | 8,385,934,065 | 9,022,943,917 |
| விற்பனைக் கிரயம் | 14 ஆ | (9,044,418,235) | (9,835,745,912) |
| மொத்த இலாபம் | | 208,324,888 | 169,316,076 |
| நிறுவக மேந்தலைகள் மீதான மானியம் | 14 இ | 190,388,603 | 206,843,175 |
| ஏனைய வருமானம் | 15 | 21,234,145 | 31,105,688 |
| | | 419,947,636 | 407,264,940 |
| நிர்வாகச் செலவினங்கள் | | (77,979,300) | (73,359,044) |
| விற்பனை விநியோகக் கிரயம் | | (154,471,085) | (37,887,395) |
| ஏனைய செலவினங்கள் | | (3,810,241) | (1,937,512) |
| செயற்பாட்டிலிருந்தான இலாபம் | | 183,687,010 | 294,080,988 |
| தேறிய நிதிக் கிரயம் | 16 | (1,758,422) | 20,062,511 |
| நிதி வருமானம் | 16 அ | (62,511,226) | (59,820,500) |
| நிதிச் செலவினங்கள் | 16 ஆ | 64,269,648 | 39,757,989 |
| வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) | 17 | 181,928,588 | 314,143,499 |
| வருமான வரிச் செலவினங்கள் | 18 | (58,745,864) | (97,731,067) |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | | 123,182,723 | 216,412,432 |
| தலா ஒரு பங்கிற்கான உழைப்பு | 19 | 12.32 | 21.64 |
| ஏனைய விபரமான வருமானம் | | | |
| ஆண்டிற்கான மொத்த விபரமான வருமானம் | | 123,182,723 | 216,412,432 |

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.)*

**2013 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2012/2013 | 2011/2012 | 2010/2011 |
|---|---|---|---|---|
| **நடைமுறையில்லாத சொத்துக்கள்** | | | | |
| ஆதன, பொறி, உபகரணம் | 20 | 223,942,057 | 208,808,059 | 209,886,592 |
| மூலதன நடைபெறும் வேலை | 21 | 29,191,969 | 12,153,192 | 413,001 |
| | | **253,134,026** | **220,961,251** | **210,299,594** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| பதிவேட்டுப் பொருட்களும் ஏனைய நுகர்வுப்பொருட்களும் | 23 | 184,649,069 | 165,784,382 | 196,757,936 |
| வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் | 24 | 11,960,848,352 | 9,671,176,077 | 12,947,440,049 |
| பெறவேண்டிய காகிதாதிகள் | 25 | - | 2,394,734 | 2,675,239 |
| ஊழியர் கடன்களும் முற்பணங்களும் | 26 | 11,401,972 | 15,017,379 | 582,290 |
| வைப்புகளும் முற்பணங்களும் | 27 | 7,564,046 | 11,449,481 | 19,867,162 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 28 | 294,331,756 | 464,694,252 | 436,672,463 |
| வங்கியிலுள்ள காசு | 29 | 335,262,627 | 296,093,770 | 515,797,182 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | **12,794,057,823** | **10,626,610,074** | **14,119,792,320** |
| மொத்தச் சொத்துக்கள் | | **13,047,191,849** | **10,847,571,325** | **14,330,091,914** |
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | | |
| புரிந்துரைக்கப்பட்ட மூலதனம் | 30 | 100,000,000 | 100,000,000 | 100,000,000 |
| மூலதன ஒதுக்கம் | 31 | 1,683,685 | 1,683,685 | 1,683,685 |
| மீள் நிர்மாணிப்பு மற்றும் மீள் பெறுமதி ஒதுக்கம் | 32 | 288,947,577 | 288,947,577 | 290,147,577 |
| புகிரப்படாத உழைப்புகள் | | 1,069,318,320 | 956,135,597 | 739,714,490 |
| | | **1,459,949,582** | **1,346,766,858** | **1,131,545,752** |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 33 | 6,421,801 | 8,996,424 | 7,418,966 |
| பிற்போடப்பட்ட வரி | 34 | 20,385,523 | 11,620,485 | 6,776,244 |
| வட்டிக் கடன்கள் | 35 | | | 3,586,937,069 |
| | | 26,807,324 | 20,616,909 | 3,601,132,279 |

| | | | | |
|---|---|---|---|---|
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| வட்டிக் கடன்கள் | 35 | 10,715,949,860 | 3,586,937,069 | 4,800,982,988 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 36 | 527,107,610 | 5,554,246,656 | 4,356,136,052 |
| செலுத்த வேண்டிய பங்கிலாபம் | 37 | 10,000,000 | 8,000,000 | - |
| பெறப்பட்ட வைப்புகளும் முற்பணங்களும் | 38 | 15,602,676 | 21,070,351 | 23,576,321 |
| செலுத்த வேண்டிய நியதிச்சட்டக் கடப்பாடுகள் | 39 | 273,083,253 | 288,129,977 | 395,900,924 |
| நிலுவைச் செலவினங்கள் | 40 | 18,691,544 | 21,803,504 | 20,817,599 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **11,560,434,943** | **9,480,187,558** | **9,597,413,884** |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | **13,047,191,849** | **10,847,571,325** | **14,330,091,914** |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

எச்.என். ஆரியதாச

**நிதி முகாமையாளர்**

இந் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பிப்பதற்குமான பொறுப்பு பணிப்பாளர் சபையினதாகும். பணிப்பாளர்களுக்காகவும் அவர்கள் சார்பாகவும் கையொப்பமிட்டவர்கள்.

| | |
|---|---|
| ...................... | .................................. |
| **தலைவர்** | **பணிப்பாளர்** |
| என்.எஸ்.எம். சம்சுதீன் | ஜே.பீ. பிறியங்கனி லியனகே |

2014 மே 23 ஆம் திகதி
கொழும்பில்

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.)*

**2013 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றக் கூற்று**

| | பங்கு மூலதனம் | மூலதன ஒதுக்கம் | வருமான ஒதுக்கம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | பகிரப்படாத வருமானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **2011 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி -** (முன்னர் குறிப்பிடப்பட்டமை) | 100,000,000 | 1,683,685 | 30,691,298 | 290,172,577 | 768,443,422 | 1,190,990,981 |
| எஸ்எல்எப்ஆர்எஸ் முதல் பிரயோகிப்பின் காரணத்திலான தாக்கம் | | - | (30,691,298) | (25,000) | (28,728,932) | (2,587,494,537) |
| **2011 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி (மீளமர்த்தப்பட்டமை)** | **100,000,000** | **1,683,685** | **-** | **290,147,577** | **739,714,490** | **(1,396,503,556)** |
| | | | | 290,147,577 | **742,541,544** | **1,393,676,502)** |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் | - | | - | - | 3,546,273 | 3,546,273 |
| பங்கிலாபம் | - | - | - | - | (10,000,000) | (10,000,000) |
| எஸ்எல்எப்ஆர்எஸ் முதல் பிரயோகிப்பின் காரணத்திலான தாக்கம் | - | | | (1,200,000) | 6,462,402 | 5,262,402 |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/ நட்டம் | | - | - | - | 216,412,432 | 216,412,432 |
| **2012.03.31 இல் உள்ளவாறான பகிரப்படாத மீதி** | **100,000,000** | **1,683,685** | **-** | **288,947,577** | **956,135,597** | **(1,181,282,449)** |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/ நட்டம் | | | | | 123,182,723 | 123,182,723 |
| பங்கிலாபம் | - | - | - | - | (10,000,000) | (10,000,000) |
| **201303.31 இல் உள்ளவாறான பகிரப்படாத மீதி** | **100,000,000** | **1,683,685** | **-** | **288,947,577** | **1,069,318,320** | **(1,068,099,726)** |

**2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சற் கூற்று**

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.)*

| மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | 2013 | 2012 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | 181,928,588 | 314,143,499 |
| **சீராக்கங்கள்** | | |
| பெறுமானத் தேய்வு | 15,358,640 | 11,981,743 |
| பங்கிலாப ஏற்பாடு | - | 8,000,000 |
| ஆண்டிற்கான பணிக்கொடைக் கட்டணம் | 517,835 | 1,645,143 |
| ஆரம்ப மீதிகளுக்கான சீராக்கம் | - | 3,661,031 |
| வட்டி வருமானம் | (62,511,226) | (59,820,500) |
| வட்டிச் செலவினங்கள் | 64,269,648 | 39,757,989 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **199,563,484** | **319,368,904** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| பதிவுப் பொருட்கள் | (18,864,688) | 30,973,554 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | (2,289,672,276) | 3,276,263,972 |
| வைப்புகளும் முற்பணங்களும் | 3,885,435 | 8,417,681 |
| ஊழியர் கடன்களும் முற்பணங்களும் | 3,615,407 | (14,435,089) |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | (5,027,139,046) | 1,198,110,604 |
| நியதிச்சட்டப்படியான பெறவேண்டியவைகள் | (2,247,564) | 280,505 |
| பெறப்பட்ட | (5,467,675) | (2,505,969) |
| நிலுவைச் செலவினங்களும் ஏற்பாடுகளும் | (3,111,961) | 985,905 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசு** | **(7,139,438,883)** | **4,817,460,067** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (3,092,458) | (67,685) |

| | | | |
|---|---|---|---|
| செலுத்தப்பட்ட வட்டி | | (64,269,648) | (39,757,989) |
| செலுத்தப்பட்ட வரி | | (60,385,251) | (204,310,129) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(7,267,186,241)** | **4,573,324,264** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | | (30,492,638) | (12,103,209) |
| தொழிற்படு மூலதனம் மீதான முதலீட்டு அதிகரிப்பு | | (17,038,777) | (11,740,191) |
| ஏனைய நிதிச் சொத்துக்களில் தேறிய முதலீடு | | 170,362,495 | (28,021,789) |
| பெற்ற வட்டி | | 62,511,226 | 59,820,500 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | **185,342,307** | **7,955,311** |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | | (8,000,000) | - |
| ஆண்டின் போதான கடன்கள் | | 10,715,949,860 | - |
| ஆண்டின் போதான கடன்களின் தீர்ப்பனவுகள் | | (3,586,937,069) | (4,800,982,988) |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | **7,121,012,791** | **(4,800,982,988)** |
| **ஆண்டின் போதான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளிலான தேறிய மாற்றங்கள்** | | **39,168,857** | **(219,703,412)** |
| ஆண்டின் ஆரம்பத்தில் | | 296,093,770 | 515,797,182 |
| ஆண்டின் இறுதியில் | குறிப்பு **31** | **335,262,627** | **296,093,770** |

# 1. கூட்டமைப்புத் தகவல்

## 1.1 அறிக்கையிடல் நிறுவனம்

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் ("கம்பனி") ஓர் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாகும். இக்கம்பனி இலங்கையில் 1982 இன் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் கீழ் 1989 ஒக்டோபர் 04 அன்று உருவாக்கப்பட்டதுடன் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கையை உரித்திடமாகக் கொண்டு இலங்கை அரசாங்கத்தால் உரித்தாக்கப்பட்டதாகும்.

பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் கம்பனியின் தலைமைஅலுவலகமும் வத்தளை ஹுனுப்பிட்டியில் அமைந்துள்ளது.

## 1.2 கம்பனி

கம்பனி ஆரம்பத்தில் நெலி, தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் ஏனைய பயிரினங்களின் உரங்களை இறக்குமதி செய்தல், அரைத்தல் மற்றும் சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தது.

## 1.3 நிதி ஆண்டு

கம்பனியின் நிதி அறிக்கையிடற் காலம் 31 மார்ச் அன்று முடிவுறும்.

## 1.4 பங்குகளிற்கான அங்கீகரிப்புத் திகதி

கம்பனிப் பணிப்பாளர் சபை நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பித்தலுக்கும் பொறுப்புடையதாகும். 2013 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2014 மே 23 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் பரிந்துரைக்கமைய வழங்கலுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## 1.5 ஊழியர்களின் எண்ணிக்கை

கம்பனியின் ஊழியர்களின் எண்ணிக்கை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| • நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | - | 18 | • நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | - | 22 |
| • எழுதுவினைஞர் மற்றும் அதனோடிணைந்தவர்கள் | - | 98 | • எழுதுவினைஞர் மற்றும் அதனோடிணைந்தவர்கள் | - | 79 |
| • சிற்றூழியர்கள் | - | 10 | • சிற்றூழியர்கள் | - | 15 |
| | | ----- | | | ----- |
| | | 126 | | | 116 |
| | | === | | | === |

## 2. தயாரிப்பின் அடிப்படை

### 2.1 இணங்கற் கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட (எஸ்எல்எப்ஆர்எஸ் என தொடர்புபடுத்தப்பட்டுள்ளது) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகள் இணங்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2011 திசெம்பர் 31 வரை அமுலாகும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் 2012 மார்ச் 31 இல் முடிவுற்ற அறிக்கைக் காலப்பகுதி உள்ளடங்கும் வகையில் கடந்த காலப்பகுதிக்கான அதன் நிதிக்கூற்றுக்களை கம்பனி தயாரித்துள்ளது. 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கம்பனியின் முதலாவது இலங்கை கணக்கீட்டு நியம (SLFRS/LKAS) மற்றும் SLFRS 1, நிதிக்கூற்றுக்களாவதுடன் இவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ற வகையில் முதற் தடவை SLFRS இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் SLFRS சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் சபை (IASB) ஆல் வழங்கப்பட்ட சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் பொருண்மையாக ஒத்தவகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள், கம்பனியின் முதலாவது இலங்கை கணக்கீட்டு நியம (SLFRS) நிதிக்கூற்றுக்களாவதுடன் இவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ற வகையில் SLFRS 1, முதற் தடவை பிரயோகிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டவையாகும். கடந்த கம்பனியின் குறிப்பிடப்பட்ட அதிகாரசபையின் நிதி நிலைமைகள் மற்றும் நிதிச் செயலாற்றல்கள் மீதான கொடுக்கல்வாங்கள்களுக்கு இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தாக்கங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 46 இல் தரப்பட்டுள்ளது.

### 2.2 அளவீட்டு அடிப்படை

நிதி நிலைமைக் கூற்றில் பின்வரும் முக்கிய விடயங்கள் தவிர நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- காணி கட்டிடங்கள்
- நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் இலாப நட்டக் கணிப்பீட்டிலிருந்து நிதிக் காரணிகளும் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.
- விளக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதி உள்ளபடியாகப் பெறுமதியிடப்பட்டதை அடுத்து பதிவுசெய்யப்படுகின்றது.

### 2.2 செயற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்

நிறுவகம் இயங்கும் ஆரம்ப பொருளாதார சுற்றாடலில் பயன்படுத்தப்படும் கம்பனியின் நாணயமாக இலங்கை ரூபாக்களில் (LKR) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சகல நிதித் தகவல்களும் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டாலன்றி அண்மித்த ரூபா பெறுமதிக்குக் கொண்டுவரப்பட்டு இலங்கை ரூபாக்களில் தரப்பட்டுள்ளன.

### 2.3 மதிப்பீடுகள் மற்றும் நடுநிலைத் தீர்வுகள் மற்றும் எடுகோள்களின் பயன்பாடு

அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினத் தொகைகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய மதிப்பீடுகள் மற்றும் நடுநிலைத் தீர்வுகள் மற்றும் எடுகோள்களை முகாமைத்துவத்தால் மேற்கொள்ள வேண்டும் என்ற தேவைப்பாட்டுடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS/LKAS) இற்கு இணங்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இம் மதிப்பீடுகளிலிருந்தும் உள்ளபடியான விளைவுகள் மாறுபடத்தக்கன. மதிப்பீடுகளும் உள்ளார்ந்த எடுகோள்களும் தொடர் அடிப்படையில்

மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீளாய்வுகள் மதிப்பீடுகள் மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதி அல்லது ஏதேனும் தாக்கமடைந்த எதிர்காலப்பகுதிகளில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 2.4.1 ஆதன, பொறி, உபகரணங்களின் மீள்மதிப்பீடு

ஏனைய விபரமான வருமானத்தில் நியாயப் பெறுமதியிலான மாற்றங்களுடன் மீள்பெறுமதியிடப்பட்ட தொகைகளில் கம்பனி அதன் காணியைக் கொண்டுள்ளது. கம்பனி அங்சாங்க மதிப்பீட்டாளரை ஈடுபடுத்தி 2007.03.13 இல் உள்ளவாறான நியாயப் பெறுமதியை நிர்ணயிக்கின்றது. மேலும் காணி விபரங்கள் குறிப்பு 20 இல் விபரிக்கப்படுகின்றது.

### 2.4.2 நிதியல்லாச் சொத்துக்களின் சேத இழப்பு

ஓர் சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதி அல்லது காசு உருவாக்கல் அலகு (CGU) அதன் பெறவேண்டிய தொகையை மிகைத்து அதன் நியாயப் பெறுமதிக்கு மேலான பெறுமதியிலிருந்து விற்பனைக்கான கிரயங்களையும் அதன் பயன்பாட்டு பெறுமதியையும் கழிப்பதன் மூலம் சேத இழப்பு நிலவுகின்றது. விற்பனைக்கான கிரயங்களைக் கழிப்பதனாலான நியாயப் பெறுமதிக் கணக்கீடு சொத்துக்களின் அகற்றலுக்கான ஊக்குவிப்புக் கிரயங்கள் கழிக்கப்பட்டு அவதானிக்கக்கூடிய சந்தை விலைகள் அல்லது அதே சொத்துக்களின் கைக்கெட்டிய தூரத்தில் விற்பனைகளைச் சேர்ப்பதிலிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. கணிப்பீட்டிற்காகப் பயன்படுத்தப்படும் பெறுமதி கழிவுக் காசுப்பாய்ச்சல் வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.4.3 ஓய்வூதிய நலன்கள்

உள்ளபடியான மதிப்பீடுகளைப் பயன்படுத்தி நலன் திட்டக் கிரயம் நிர்ணயிக்கப்படுகின்றது. உள்ளபடியான மதிப்பீடானது எதிர்காலத்தில் உள்ளபடியான அபிவிருத்திகளிலிருந்து மாறுபடும் பல்வேறு எடுகோள்கள் மேற்கொள்வதில் ஈடுபடுகின்றது.கழிவு விகிதம், எதிர்காலச் சம்பள உயர்வுகள் மற்றும் இழிவு வீதங்களின் நிர்ணயிப்பை இது உள்ளடக்குகின்றது. மதிப்பீட்டின் சிக்கல் உள்ளாந்த எடுகோள்களின் படி நீண்ட கால அதன் தன்மை, விபரிக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் உயர் பாதிப்பிற்கு இவ் எடுகோள்களின் மாற்றங்கள் உட்பட்டவையாகும். சகல எடுகோள்களும் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

### 2.4.4 நிதி உபகரணங்களின் நியாயப் பெறுமதி

நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புகளும் நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படுகையில் செயற்படும் சந்தைகளிலிருந்து நிலைமையைப் பெற்றுக்கொள்ள இயலாது கழிவுக்குட்பட்ட காசுப்பாய்ச்சல் வடிவம் உட்பட மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தியே அவற்றின் நியாயப் பெறுமதியில் நிர்ணயிக்கப்படுகின்றன. இவ்வடிவங்களுக்கான உள்ளீடுகள் சந்தை அவதானிப்புகளிலிருந்து இயலுமானளவு பெறப்பட்டுள்ளன. இவை சாத்தியப்படாத போது நடுநிலை அடிப்படை நியாயப் பெறுமதிகளின் உருவாக்கத்தில் தேவைப்படுகின்றது. திரவ இடர், கடன் இடர், விரைவுஈ போன்ற உள்ளீடுகளை நடுநிலை தீர்வுகள் உள்ளடக்கியுள்ளன. இக் காரணிகள் தொடர்பான எடுகோள் மாற்றங்கள் நிதி உபகரணங்களில் அறிக்கையிடப்பட்ட நியாயப் பெறுமதியில் தாக்கத்தை விளைவிக்கக்கூடும்.

## 3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைககளின் பொழிப்பு

சுட்டிக்காட்டப்பட்டாலன்றி, SLFRS களுக்கு மாற்றமடையும் நோக்கிற்காக 2011 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் SLFRS ஆரம்ப தயாரிப்பின் போதும் கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் தரப்பட்டுள்ள சகல காலப்பகுதிகளுக்கும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

எதிர்வு கூறக்கூடிய எதிர் காலத்திற்கு கம்பனி தொடர்ந்தியங்குவதற்கான இயலுமையை கம்பனி கொண்டுள்ளமை பற்றியும் வியாபாரத்தை முடிவிற்குக் கொண்டுவருவதற்கோ அல்லது கலைப்பிற்குள்ளாக்குவதற்கோ எண்ணம் இல்லாதமைக்கும் பணிப்பாளர்கள் மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளனர்.

## 3.1. அன்னிய செலாவணி

### 3.1.1 அன்னிய செலாவணி கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும்

முதலில் ஏற்பிசைவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் திகதியிலான செயற்படும் நாணய புள்ளி வீதத்தில் அன்னிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்டன. ஆதன, பொறி, உபகரணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாணய சொத்துக்களும் பொறுப்புகளும் உருவமுள்ள வியடங்களாவதுடன் பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கல் அல்லது உற்பத்தியின் போக்கு பயன்பாட்டிற்காக வைத்துக்கொள்ளப்பட்ட ஏனையவர்களுக்கு வாடகைக்காக நிர்வாக நோக்கங்களுக்காகவும் அன்னிய செலாவணி எதிர்பார்க்கப்படுபவையும் அறிக்கைத் திகதியில் உள்ளவாறான நாணயப் புள்ளி வீதத்தில் மீள் தயாரிக்கப்படுகின்றன. நாணய விடயங்களின் பரிமாற்றம் அல்லது தீர்ப்பனவின் போது ஏற்படும் இலாபங்களும் நட்டங்களும் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

சேத இழப்புக் கிரயத்திலான மாற்றங்களுடன் தொடர்புடைய பரிமாற்ற வேறுபாடுகள் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

## 3.2 ஆதன, பொறி, உபகரணங்கள்

ஆதன, பொறி, உபகரணங்கள் உருவக விடயங்களாகும். ஒரு வருடத்திற்கு மேலான காலமாகப் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பாக்கப்பட்டது. பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்கல் அல்லது உற்பத்தியின் போது பயன்பாட்டிற்காக நிர்வாக நோக்கங்களுக்கான ஏனையவர்களுக்கு வாடகைக்காக உள்ளவையாகும். காணி நியாயப் பெறுமதியில் அறவிடப்படும் அதே வேளை ஆதன, பொறி, உபகரணங்கள் விடயங்கள் கிரயத்திலும் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட சேத இழப்புகள் ஏதேனும் இருப்பின் அவை கருத்திற் கொள்ளப்பட்டும் அளவிடப்படுகின்றன.

### 3.2.1 ஏற்பிசைவு செய்யப்படும் அடிப்படை

சொத்துக்களுடன் தொடர்புபட்ட எதிர்காலப் பொருளாதார நலன்கள் கம்பனியை வந்தடைவதுடன் சொத்துக்களின் கிரயம் நம்பகரமான முறையில் அளவிடப்பட முடியுமாயின் ஆதன, பொறி, உபகரணங்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.2.2 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

ஆதன, பொறி, உபகரணங்கள் குறித்த வகையில் செயற்படுத்துவதற்காக சொத்துக்களை அப் பகுதிக்கும் தேவையான நிலைக்கும் கொண்டுவருவதற்காக நேரடியாக ஏற்கப்பட்ட ஏதேனும் கிரயங்கள் உள்ளடங்கலான கிரயத்தில் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

சுய நிர்மாணச் சொத்துக்களின் கிரயம் அவை பயன்படுத்தப்படும் நோக்கத்திற்காக தொழிற்படும் நிலைக்கு அவை கொண்டுவரப்படுவதற்காகவும் பொருட்கள் கழற்றி அகற்றப்பட்டு அவை ஸ்தாபிக்கப்பட உள்ள இடங்களுக்கு மீளப் பொருத்தப்படும் வரை ஏற்கப்படும் கிரயங்கள், பொருட்களின் கிரயம், நேர் ஊழியம் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

### 3.2.3 பின்தொடர் கிரயங்கள்

செலவினத்துடன் தொடர்புபட்ட எதிர்காலப் பொருளாதார நலன்கள் தொகுதிக்குப் பாய்ச்சப்படுவதற்கான சாத்தியமற்ற பின் தொடர் செலவினங்களே

மூலதனமாக்கப்படுகின்றன. தொடர் திருத்தச் செலவுகள் மற்றும் பராமரிப்பு அவை ஏற்கப்படுகையில் செலவிடப்படுகின்றன.

### 3.2.4 மீள் மதிப்பீட்டு முறை

கம்பனி சகல இறையில் காணி மற்றும் கட்டிடத்தொகுதிக்கும் மீள் மதிப்பீட்டு முறையைப் பிரயோகிக்கின்றது.

பின்தொடரும் திரண்ட பெறுமானத்தேய்வும் பின்தொடர் திரண்ட சேத இழப்புகளும் இருப்பின் அவை கழிக்கப்பட்டு மீள்பெறுமதியிடப்பட்ட 2007.03.12 ஆம் திகதியிலான அவற்றின் நியாயப் பெறுமதியிலிருந்து ஆதன, பொறி இயந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

கம்பனியின் ஆதன, பொறி, இயந்திரங்கள் 2012 மார்ச் 31 இற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமம் ளுடுயுளு இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் மீள்பெறுமதியிடப்பட்ட தொகையில் கொண்டு செல்லப்படுகின்றன.

### 3.2.5 பின்தொடர் கிரயங்கள்

ஆதன, பொறி, இயந்திர விடயங்கள் கிரயம் அல்லது மதிப்பீட்டில் பின்தொடர்ந்து அளவிடப்பட்டு திரண்ட பெறுமானத்தேய்வும்/ அல்லது திரண்ட சேத இழப்புகளும் கழிக்கப்பட்டு ஆதன, பொறி, இயந்திர பாகங்களின் கிரயமும் பதிலீடு செய்யப்படுகின்றன. ஒரே காலஇடைவெளியில் பதிலீடு செய்யப்பட வேண்டிய முக்கிய பாகங்களைக் கம்பனி அவற்றைக் குறித்த பயன்தரு ஆயட்காலத்துடனான தனியான சொத்துக்களாக ஏற்பிசைவு செய்து பெறுமானத்தேய்வீடு செய்கின்றன.

### 3.2.6 கிரய வடிவத்தில் தேர்ந்தெடுத்தல்

மீள் மதிப்பீட்டுத் திகதியான 2007.03.12 இல் பிரேரிக்கப்பட்ட கிரயமாக காணி கட்டிடடம் தவிர்ந்த ஆதன, பொறி, இயந்திரத்தின் மீள் பெறுமதியிடப்பட்ட தொகையை கம்பனி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதன் படி, காணி கட்டிடங்கள் தவிர்ந்த ஆதன, பொறி, இயந்திரங்கள் பிரேரிக்கப்பட்ட கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய திரண்ட சேத இழப்புக்கள் கழிக்கப்பட்டதை அடுத்து பதிவு செய்யப்படுகின்றன.

கம்பனி காணி, கட்டிடங்களை மீள்பெறுமதியிடப்பட்ட தொகைகளில் அளவிட்டு நியாயப் பெறுமதியிலான மாற்றங்கள் மூலதனக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. 2007.3.12 இல் காணி கட்டிடங்களை நியாயப் பெறுமதியில் நிர்ணியிப்பதற்கு அரசாங்க மதிப்பீட்டாளர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

### 3.2.7 குறை ஏற்பிசைவு

அதன் எதிர்காலப் பயன்பாட்டிலிருந்து அல்லது கைதவிர்ப்புகளிலிருந்து பொருளாதார நலன் எதிர்பார்க்கப்படாத போது அல்லது கைதவிர்ப்பின் போது ஆதன, பொறி, இயந்திரங்களின் ஓர் விடயத்தின் கொண்டு செல்லல் தொகை குறை ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

ஆதன, பொறி, இயந்திர விடயத்தின் குறை ஏற்பிசைவிலிருந்து உருவாகும் இலாபம் அல்லது நட்டம் அவ்விடயம் குறை ஏற்பிசைவு செய்யப்படுகையில் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது. ஆதன, பொறி, இயந்திரத்தின் ஓர் விடயத்தின் கொண்டு செல்லல் தொகை ஏற்பிசைவு செய்யப்படுகையில் பதிலீடு செய்யப்பட்ட பகுதியின் எஞ்சியுள்ள கொண்டு செல்லல் தொகை மீள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.2.8 பெறுமானத்தேய்வு

ஓர் சொத்தின் பெறுமானத்தேய்வு பயன்பாட்டிற்காக கிடைக்கப்பெறும் வேளையிலிருந்து அதாவது முகாமைத்துவத்தின் விருப்பத்திற்கமைய அது தேவையான இடம் மற்றும் நிலையில் இருக்கையில் ஆரம்பமாகின்றது. விற்பனைக்காக உள்ள அல்லது சொத்து குறை ஏற்பிசைவு செய்யப்பட்ட திகதி இவை இரண்டில் முதலில் சொத்து வகைப்படுத்தப்பட்ட திகதியில் சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு முடிவிற்கு வருகின்றது. சொத்து முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்டாலன்றி சொத்துக்கள் விளைவற்று அல்லது பயன்பாட்டிலிருந்து விலக்கப்படுவதனால் பெறுமானத்தேய்வு முடிவிற்கு வரமாட்டாது.

காணி பெறுமானத்தேய்விடப்படுவதில்லை. ஏனைய சொத்துக்களின் பெறுமானத்தேய்வு சொத்துக்களின் வேறுபட்ட வகைக்கேற்ப கம்பனியால் சொத்தின் எதிர்கால பொருளாதார நலன்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்திற்கு உகந்த வகையில் நேர்கோட்டு அடிப்படையில் பின்வரும் வீதங்களில் கணிப்பிடப்படுகின்றது.

அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலங்களும் குறைத்தெழுதப்பட்ட பெறுமதிகளும் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. நடைமுறை மற்றும் ஒப்பீட்டுக் காலப்பகுதிகளின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலம் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 20 ஆண்டுகள் |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 05 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 05 ஆண்டுகள் |
| அலுவலக தளபாடம் | 10 ஆண்டுகள் |
| பட்டறை உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| ஆய்வு கூட உபகரணம் | 05 ஆண்டுகள் |
| கணனி உதிரிப்பாகங்கள் | 05 ஆண்டுகள் |

சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகையானது அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகைக்கு மேற்படின் உடனடியாக அறவிடப்பட வேண்டிய தொகைக்கு சொத்தின் கொண்டுசெல்லல் தொகை குறைத்தெழுதப்படுகின்றது.

### 3.2.9 நிதி அல்லாச் சொத்துக்களின் சேத இழப்பு

நிதி அல்லாச் சொத்துக்களின் கொண்டு செல்லல் பெறுமதியானது அதாவது இருப்புகள் மற்றும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் தவிர்ந்த ஆதன, பொறி, இயந்திரங்கள் மற்றும் அருவகச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் சேத இழப்பு வெளிப்பாடு ஏதேனும் உள்ளதா என்பது குறித்து மீளாய்வு செய்யப்படுகின்றது. சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகை அல்லது அதன் காசு உருவாக்கல் அலகு (CGU) அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையை மீறுகையில் ஓர் இழப்பு ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. சொத்தொன்றின் அறவிடப்பட வேண்டிய தொகை அல்லது காசு உருவாக்கல் அலகானது அதன் பயன்பாட்டுப் பெறுமதியிலும் நியாயப் பெறுமதியிலும் அதிகமாவதுடன் விற்பனைக்கான கிரயத்தைக் கழிக்கும் போது பெறப்பட்டதாகும். பயன்பாட்டுப் பெறுமதி மதிப்பிடப்படுகையில் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்கள் சொத்துக்களுக்குரிய இடர்கள் அல்லது காசு உருவாக்கல் அலகிலும் பணத்தின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகள் வெளிப்படுத்தப்படும் வேளையில் முன் வரிக் கழிப்பீட்டு வீதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதியில் கழிவிடப்படுகின்றன. சேத இழப்பு ஆய்வின் போது தனியாக ஆராயப்பட முடியாத சொத்துக்கள், ஏனைய சொத்துக்கள் அல்லது காசு உருவாக்கல் அலகின் காசுப்பாய்ச்சல்களின் பெரும்பாலான சுதந்திரத்தன்மையுடைய தொடர் பயன்பாட்டிலிருந்து காசு உட்பாய்ச்சல்களை உருவாக்கி சொத்துக்களின் சிறிய தொகுதிகளாக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

ஓர் சொத்தின் அறவிடப்பட வேண்டிய தொகை (அல்லது காசு உருவாக்கல் அலகு) அதன் கொண்டு செல்லல் தொகையிலும் பார்க்கக் குறைவாக மதிப்பிடப்பட்டு சொத்தின் கொண்டு செல்லல் தொகை (அல்லது காசு உருவாக்கல் அலகு) அதன் அறவிட வேண்டிய தொகைக்குக் குறைக்கப்பட்டுள்ளது. சேத இழப்பானது விபரமான வருமானக் கூற்றில் உடனடியாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நன்மதிப்பு தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் தொடர்பாக முன்னைய காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்புகள் இப்போது இல்லாத அல்லது இழப்பு குறைவடையும் ஏதேனும் சாத்தியங்கள் இருப்பின் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் மதிப்பிடப்படுகின்றன. அறவிடப்பட வேண்டிய தொகை நிர்ணயிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்படின் ஓர் சேத இழப்பு மாற்றியமைக்கப்படும். சேத இழப்பு ஏற்பிசைவு செய்யப்படாவிடில் தேறிய பெறுமானத்தேய்வு அல்லது காலக்கழிவு நிர்ணயிக்கப்படக்கூடிய கொண்டு செல்லல் தொகையை மீறாத வகையில் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகை அளவு வரை மாத்திரமே ஓர் சேத இழப்பு மாற்றியமைக்கப்படும்.

### 3.3 அருவகச் சொத்துக்கள்

தொடர்புபட்ட உபகரணத்துடன் செயற்பாட்டின் ஒருங்கிணைப்பிற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருட்கள் கணனி உபகரணத்தின் ஓர் பகுதியாக மூலதனமாக்கப்பட்டுள்ளது.

### 3.4 மூலதன நடைபெறும் வேலை

ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு ஆண்டின் போது ஏற்கப்பட்ட மூலதனச் செலவினங்கள் மூலதன நடைபெறும் வேலையைக் ஆண்டின் போது ஏற்கப்பட்ட மூலதனச் செலவினங்கள் மூலதன நடைபெறும் வேலையாகக் காண்பிக்கப்படுவதுடன் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்ட மற்றும் பயன்பாட்டிலுள்ள மூலதனச் சொத்துக்கள் ஆதன, பொறி, இயந்திரத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

### 3.5 நடைமுறைச் சொத்துக்கள்

காசு மற்றும் வங்கி மீதிகள் மற்றும் வழமையான செயற்பாட்டு சுற்றோட்டத்தின் போது காசாக தேறக்கூடியதென எதிர்பார்க்கப்பட்டவைகள் அல்லது நிதிநிலைமைக் கூற்றில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் இதில் எது குறுகியதோ அதன் போது காசாக தேறப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சொத்துக்கள் நடைமுறைச் சொத்தாக நிதி நிலைமைக் கூற்றில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.5.1 இருப்புகள் - நேர் மற்றும் கலப்பு உரங்கள்

இருப்புகள் (நேர் மற்றும் கலப்பு உரங்கள்) கிரயத்திலிருந்து மானியம் கழித்து குறிப்பிடப்பட்டுள்ளன. கிரயம் முதல் வந்தது முதல் வெளியே (FIFO) முறையில் நிர்ணயிக்கப்படுகின்றது. கலப்பு உரங்களின் கிரயம், மூலப் பொருட்கள், நேர் ஊழியம், ஏனைய நேர் கிரயங்கள் மற்றும் தொடர்புபட்ட உற்பத்தி மேந்தலைகளை உள்ளடக்கியதாகும். உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட இருப்புகள் கிரயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேறிய கைக்கெட்டும் பெறுமதியானது வழமையான வியாபாரத்தின் போதான மானியப் பெறுமதியிலிருந்து பிரயோகிக்கப்படக்கூடிய விற்பசைன் செலவினங்களைக் கழித்துப் பெறப்பட்டவையாகும்.

### 3.5.1.1 இருப்புகளுக்கான சேத இழப்பு

தேறிய கைக்கெட்டும் பெறுமதி வெளிப்படுத்தப்படுவதற்காக சகல அசைவற்ற மற்றும் வழக்கிழந்த பொருட்களுக்கும் அனுமதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.5.2. பொதியிடற் பொருட்களும் நுகர்வுப் பொருட்களும்

பொதியிடற் பொருட்களும் நுகர்வுப் பொருட்களும் கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

## 3.6 நிதி உபகரணங்கள்

### 3.6.1 வழிவரா நிதிச் சொத்துக்கள்

நிதி உபகரணங்களின் ஒப்பந்த ஏற்பிசைவுகளுக்கான ஓர் தரப்பினராக கம்பனி தோன்றினால் மாத்திரமே நிதிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கம்பனி அதன் நிதிச் சொத்துக்களை அதன் ஆரம்ப ஏற்பிசைவின் போதே வகைப்படுத்தலை நிர்ணயிக்கின்றது. நிதிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்பட்டதும் நேரடியாகக் கண்டெடுக்கக் கூடிய கொடுக்கல்வாங்கல்களின் கிரயங்கள் கூட்டப்பட்ட நியாயப் பெறுமதியில் அவை அளவிடப்படுகின்றன. இலாப நட்டத்தினூடாக உள்ள நியாயப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கு நேரடியாக கண்டெடுக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் கிரயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பின்வரும் ஒரு வகையில் கம்பனி அதன் நிதிச் சொத்துக்களை ஆரம்ப ஏற்பிசைவின் போது நிர்ணயிக்கின்றது.

அ. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)
ஆ. கடன்களும் பெறவேண்டியவைகளும்

#### 3.6.1.1 வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

கடன்கள் மற்றும் பெறுவேண்டியவை தவிர்ந்த நிலையான முதிர்வினைக் கொண்டதும் நிலையான அல்லது நிர்ணயிக்கக் கூடிய கொடுப்பனவுகளுடனான வழிவரா நிலையான சொத்துக்கள் வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM) ஆகும். விற்பனைக்காக உள்ள போது அல்லது இலாப நட்டங்களினூடாக நியாயப் பெறுமதியில் விதந்துரைக்கப்படாத முதிர்வு வரை அவற்றை வைத்திருக்கக் கூடிய இயலுமையும் சாதகமான நோக்குடனும் கம்பனி கொண்டுள்ள முதலீடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

#### 3.6.1.2 கடன்களும் பெறவேண்டியவைகளும்

கம்பனி கிட்டிய தவணையில் அல்லது உடன் விற்பனை செய்யும் நோக்கம் அல்லாத செயற்படும் ஓர் சந்தையில் கோரப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க வழிவராத நிதிச் சொத்துக்கள் கடன்களும் பெறவேண்டியவைகளும் ஆகும். நடைமுறையல்லாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்ட அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவிலான 12 மாத காலப்பகுதிக்கு மேற்பட்ட முதிர்வுக் காலம் தவிர்ந்த நடைமுறைச் சொத்துக்களில் கடன்களும் பெறவேண்டியவைகளும் உள்ளடக்கப்படுகின்றன. கம்பனியின் கடன்களும் பெறவேண்டியவைகளும், பெறவேண்டிய மானியம், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவில் உள்ள அரசாங்க பிணை, மீள் கொள்வனவு, நிலையான வைப்புகள், முற்கொடுப்பனவுகள், முற்பணங்கள், வைப்புகள், ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை கம்பனியின் கடன்களும் பெறவேண்டியவைகளும் உள்ளடக்குகின்றன.

### 3.6.2 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

உகந்த வகையில் விற்பனைக்கான நிதிச் சொத்துக்களுக்காக உள்ளவை, வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள், கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள், இலாப அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

### 3.6.3. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் உள்ள நிதிச்சொத்துக்கள்

ஆரம்ப ஏற்பிசைவில் விதந்துரைக்கப்பட்ட அல்லது வியாபாரத்திற்காக உள்ளதாக வகைப்படுத்தப்பட்டதாயின் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புகள் வகைப்படுத்தப்படுகின்றன.

### 3.6.4. பின் தொடர் அளவீடு

கீழே விபரிக்கப்பட்டவாறு நிதிச் சொத்துக்களின் பின்தொடர் அளவீடு அவற்றின் வகைப்படுத்தில் தங்கியுள்ளன.

### 3.6.4.1 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்

இலாப நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களையும் வியாபாரத்திற்காக உள்ள நிதிச் சொத்துக்களையும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய தவணையில் மீள்கொள்வனவிற்கோ அல்லது விற்பனை செய்யும் நோக்கிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் வியாபாரத்திற்காகக் கொண்டுள்ளவையாக நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

### 3.6.4.1.1 வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM) தாக்கமுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்தில் பின்தொடர்ந்து அறவிடப்படுகின்றன. கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் மற்றும் கொள்வனவு மீதான கழிவு அல்லது இலாபத்தை கருத்திற்கொண்டே காலக்கழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது.

### 3.6.4.1.2. கடன்களும் பெறவேண்டியவைகளும்

ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து கடன்களும் பெறவேண்டியவைகளும் சேத இழப்பிற்கான படிப்பணம் கழிக்கப்பட்டு தாக்கல் வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவு கிரயத்தில் அளவிடப்படுகின்றது. வினைத்திறனான வட்டி வீதத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ள கிரயங்கள் அல்லது கட்டணங்கள் மற்றும் கொள்வனவு மீதான இலாபம் அல்லது ஏதேனும் கழிவைக் கருத்திற்கொண்டு காலக்கழிவுக் கரயம் கணிப்பிடப்படுகின்றது. வினைத்திறனான வட்டி வீதக் காலக்கழிவானது நிதி வருமானத்தில் இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

நிதிச் சொத்துக்களிலிருந்து காசுப்பாய்ச்சல்களைப் பெறும் உரிமைகள் காலம் கடந்து அல்லது மாற்றப்பட்ட நிதிச் சொத்துக்களின் உரிமையின் சகல இடர்களும் நலன்களும் கம்பனி தொடர்ந்து மாற்றுமாயின் சொத்துக்கள் குறை ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. சேத இழப்பால் ஏற்படும் நட்டங்கள் இலாபங்கள் அல்லது நட்டங்களில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.6.5 குறை – ஏற்பிசைவு

நிதிச் சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் காலம் கடந்த போது அல்லது ஓர் கொடுக்கல் வாங்கல்களில் உள்ள பாரியளவில் உள்ளதை மாற்றுகையில் நிதிச் சொத்துக்கள் கம்பனியால் குறை ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

நிதிச் சொத்துக்களின் சகல இடர்களும் நலன்களும் மாற்றப்படுகின்றன அல்லது நிதிச் சொத்துக்களில் கட்டுப்பாட்டைக் கொண்டிராத போது உரிமையின் சகல இடர்களும் நலன்களும் போதியளவில் மாற்றப்படாதிருக்கின்றன. கம்பனியால் ஏதேனும் வட்டி குறை ஏற்பிசைவிற்காகத் தகுதியாகும் போது அல்லது உருவாக்கப்படுகையில் நிதி நிலைமைக் கூற்றில் வேறாக சொத்துக்கள் அல்லது பொறுப்புகளாக ஏற்பிசைவு செய்யப்படும். நிதிச்

சொத்துக்களின் குறை ஏற்பிசைவின் போது சொத்தின் கொண்டு செல்லல் தொகை (அல்லது சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகையாக ஒதுக்கப்பட்ட பகுதி மாற்றப்பட்டால்) பெறப்பட்டதாகக் கருதப்படுகையில் (ஏதேனும் புதிய சொத்துக்கள் பெறப்பட்டு அவற்றிலிருந்து ஏதேனும் எதிர்பார்க்கப்பட்ட புதிய பொறுப்புகள் கழிக்கப்பட்டவை உள்ளடங்கலாக) இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. நிதிப் பொறுப்பானது அதன் ஒப்பந்தக் கடப்பாடுகளை வெளிப்படுத்துகையில் அல்லது இரத்துச் செய்கையில் அல்லது காலம் கடக்கையில் குறை ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.6.6 நிதிச் சொத்துக்களின் சேத இழப்பு

**காலக்கழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்பட்ட சொத்துக்கள்**

தனியாக முக்கியத்துவம் பெறாத நிதிச் சொத்துக்களுக்காக சேர்ந்தோ அல்லது தனியாக முக்கியத்துவம் பெறும் நிதிச் சொத்துக்களுக்காக தனியான உள்ள முக்கிய சான்றுகள் கொண்டதா என ஒவ்வொரு அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவில் கம்பனியால் காலக்கழிவுக் கிரயத்திலான நிதிச் சொத்துக்களுக்காக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தனியாக மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களுக்காக முக்கிய சேத இழப்பிற்கான சான்று நிலவுவதில்லை என தொகுதி நிர்ணயிக்குமாயின் நிதிச் சொத்துக்களுக்காக நிதிச் சொத்துக்களின் ஓர் தொகுதியிலுள்ள சொத்துக்களில் முக்கியமானதாகவோ அல்லது இல்லாததாகவோ இருக்கும் ஒத்த கடன் இடர் வடிவங்களுடனான சேத இழப்புகளை கூட்டாக மதிப்பீடு செய்கின்றன.

சொத்தின் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் ஏற்பட்ட ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சம்பவங்களின் விளைவால் (ஓர் “ இழப்பு சம்பவம்”) அவ் இழப்புச் சம்பவம் (அல்லது சம்பவங்கள்) நம்பகமான முறையில் மதிப்பிடத்தக்க நிதிச் சொத்தின் எதிர்கால மதிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சல்களில் தாக்கத்தை ஏற்கப்படுத்துகின்ற சேத இழப்பொன்று உண்மையாக ஏற்கப்பட்டமைக்கான நோக்கச் சான்று இருந்தால் மட்டுமே ஓர் நிதிச் சொத்து சேத இழப்பிற்கு உட்படுத்தப்பட்டு சேத இழப்புகள் ஏற்கப்படுகின்றன. இழப்பின் தொகையானது சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடத்தக்க எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களுக்கும் (ஏற்கப்படாத எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால கடன் இழப்புகள் தவிர்ந்த) உள்ள வேறுபாட்டில் இழப்புத் தொகை கணிக்கப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி நிதிச் சொத்துக்களின் தாக்கமளிக்கும் மூல வினைத்திறனான வட்டி வீதத்தில் கழிவிடப்படுகின்றது.

காலக்கழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகளுக்கான இழப்புத் தொகை சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களின் நடப்புப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டில் (ஏற்கப்படாத எதிர்காலக் கடன் இழப்புகள் தவிர்ந்தவை) நிதிச் சொத்துக்களின் மூலத் த வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகளாக்க வட்டி வீதத்தில் கழிவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகை குறைக்கப்பட்டு இழப்புத் தொகை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

பின்தொடர் காலத்தின் போது சேத இழப்புத் தொகை குறைவடையுமாயின் குறைவடைந்தமை சேதத்தின் பின்னர் ஏற்கப்பட்ட ஓர் நிகழ்வாக முக்கியமாகத் தொடர்புபடுத்தப்பட முடியுமாயின் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பானது மீட்கப்பட்டு விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

#### 3.6.6.1 கடன்களும் பெறவேண்டியவைகளும்

குறித்த சொத்துக்கள் மற்றும் கூட்டு மட்டத்தில் பெறவேண்டியவற்றிற்கான சேத இழப்பின் சான்றுகளை கம்பனி கருத்திற்கொள்கின்றது. தனியாக முக்கியத்துவம் பெறும் சகல சேத இழப்பும் குறித்த சேத இழப்பாக மதிப்பிடப்படுகின்றது. தனியாக முக்கியத்துவம் பெறாத

கடன்களும் பெறவேண்டியவைகளும் ஒத்த இடர் தன்மை கொண்ட பெறவேண்டியவை கூட்டாக ஒருங்கிணைக்கப்பட்டு சேத இழப்பிற்காக ஒருங்கிணைத்து மதிப்பிடப்படுகின்றன.

கூட்டு சேத இழப்பை மதிப்பிடுகையில் தொகுதியானது தவறக்கூடிய சாத்தியத்தின் வரலாற்றுப் போக்கையும், அறவீடுகளின் காலம் மற்றும் ஏற்கப்பட்ட இழப்புத் தொகை, வரலாற்றுப் போக்குகளால் தீர்மானிக்கப்பட்டதிலும் பார்க்க பெருமளவில் அல்லது குறைந்த அளவில் உள்ளபடியான நட்டங்கள், நடப்புப் பொருளாதார மற்றும் கடன் நிலவரங்களுடன் முகாமைத்துவத் தீர்மானங்களுக்காகச் சீராக்கப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்தில் இழப்புகள் ஏற்பிசைவு செய்யப்பட்டு கடன்கள் மற்றும் பெறவேண்டியவற்றிற்கு எதிரான ஓர் அனுமதிக் கணக்கில் வெளிப்படுத்தப்படுகின்றன. (உ+ ம் ஓர் கடன்பட்டோரால் மீள் கொடுப்பனவு செய்யப்பட்டது) பின்தொடர் சம்பவம் சேத இழப்பில் குறைவை ஏற்படுத்துமாயின் சேத இழப்பிற் குறைவு இலாப நட்டத்தினூடாக மீட்கப்படுகின்றது.

## 3.7 வியாபாரப் பெறவேண்டியவைகள்

வழமையான வியாபார நடைமுறையில் பொருட்களின் விற்பனைக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியுள்ள தொகை வியாபாரப் பெறவேண்டியவையாகும். வியாபாரத்தின் வழமையான செயற்பாட்டு சுழற்சியின் போது சேகரிப்பு எதிர்பார்க்கப்படுவதுடன் அவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. பட்டியல் பெறுமதியிலான வியாபாரப் பெறவேண்டியவைகள் நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

பட்டியல் பெறுமதியிலான வியாபாரப் பெறவேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயப்பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டு பின்னர் மூலப் பட்டியலிடப்பட்ட பெறுமதியிலிருந்து சேத இழப்பைக் கழித்து கணிப்பிடப்படுகின்றன.

வியாபாரப் பெறவேண்டியவை சேத இழப்கிற்குட்பட்டவை என்ற நோக்கச் சான்று உள்ளதா என்பது குறித்து கம்பனி ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலும் மதிப்பீட்டை மேற்கொள்கின்றது. வியாபாரப் பெறவேண்டியவற்றிற்கான சேத இழப்பின் நோக்கச் சான்றுகள் கொடுப்பனவுகளின் சேகரிப்பிலான கம்பனியின் கடந்த கால அனுபவங்கள் ஆகக் கூடியது 90 நாட்களைக் கடந்த தாமதக் கொடுப்பனவுகளின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு என்பவற்றை உள்ளடக்கியதாகும். வியாபாரப் பெறவேண்டியவைகள் சேத இழப்பிற்கு உட்பட்டு சேத இழப்பிற்கான நோக்கச் சான்று இருந்தால் மட்டுமே சேத இழப்புகள் ஏற்கப்படுகின்றன. சகல வியாபாரப் பெறவேண்டியவைகளும் சேத இழப்பிற்காக தனியாக மதிப்பிடப்படுகின்றன.

சேத இழப்பிற்கான வியாபாரப் பெறவேண்டியவைகளைா மதிப்பிடுவதற்கான முறையும் அடிப்படையும் பின்வருமாறாகும்.

தனியான மதிப்பீட்டு முறை: பின்வரும் வகையிலான வியாபாரப் பெறவேண்டியவைகள் சேத இழப்புக் கணிப்பீட்டிற்கு தனியாக மதிப்பிடப்படுகின்றன.

i. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

ii. கமநல சேவை நிலையங்கள்

iii. அங்கீகரிக்கப்பட்ட பிரமுகர்கள்

iv. அரசாங்க நிறுவகங்களும் திணைக்களங்களும்

### 3.8 காசும் காசுக்குச் சமனானவைகளும்

காசுப் பாய்ச்சல் கூற்றில் காசும் காசுக்குச் சமனானவைகள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள அழைப்பில் உள்ள வைப்புகள், மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான அடிப்படை முதிர்வைக் கொண்ட ஏனைய குறுங்காலத் தவணை உயர் திரவ முதலீடுகளை உள்ளடக்குகின்றன.

### 3.9. கூறப்பட்ட மூலதனம்

பொதுத் திறைசேரி, இலங்கை அரசாங்கத்தின் பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்ட சாதாரண பங்குகள் உரிமை மூலதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.10 நிதிப் பொறுப்புகள்

#### 3.10.1 வழிவரா நிதிப் பொறுப்புகள்

#### 3.10.1.1 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

கம்பனி நிதி உபகரணங்களின் ஒப்பந்த ஏற்பாடுகளின் ஓர் தரப்பாகினால் மாத்திரமே நிதிப் பொறுப்புகள் SLFRS/LKAS இன் நோக்கெல்லைக்குள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. இலாப நட்டத்தினூடாக உள்ள நியாயப் பெறுமதியிலான நிதிப் பொறுப்புகளாகவும் ஏனைய நிதிப் பொறுப்புகளுமாக இரு வகையாக வகைப்படுத்தப்பட்டு நிதிப் பொறுப்புகள் ஆரம்பத்தில் நியாயப்பெறுமதியுடன் கூட்டப்படுகின்றன. கம்பனி ஏனைய நிதிப் பெறுப்பு வகையாக அதன் நிதிப் பொறுப்புகளை வகைப்படுத்தியுள்ளது.

#### 3.10.2 வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்

கம்பனியின் ஏனைய நிதிப் பெறுப்புகள் கடன்பெறல்கள், வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளையும் வங்கி மேலதிகப்பற்றையும் உள்ளடக்கியுள்ளது. கொடுக்கல் வாங்கல் விலையான நியாயப் பெறுமதியில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் ஏற்பிசைவு செய்யப்பட்டு பணத்தின் நேரப் பெறுமதி முக்கியம் பெறாத குறுகிய காலத்தில் செலுத்தப்பட வேண்டியதாக எதிர்பார்க்கப்படும் மூலப் பட்டியல் பெறுமதியில் பின்தொடர்ந்து மதிப்பிடப்பட்டும் வருகின்றது.

வழங்குனர்களிடமிருந்து வழமையான வியாபார நடவடிக்கைகளில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்காகச் செலுத்தப்படுவதற்கான வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய கடப்பாடுகளாகும். வியாபாரத்தின் வழமையான செயற்பாட்டு நடவடிக்கைகளில் நடைமுறைப் பொறுப்புகளாக வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் வகைப்படுத்தப்படுகின்றன.

#### 3.10.3. கடன் பெறல்கள்

#### 3.10.3.1. ஆரம்ப ஏற்பிசைவு

நியாயப் பெறுமதியில் கடன்பெறல்கள் ஏற்கப்பட்ட தேறிய கொடுக்கல்வாங்கல் கிரயங்களில் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கடன் பெறல்கள் பின்னர் வினைத்திறனான வட்டி முறைமையைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்தில் பின்தொடர்ந்து கொண்டு செல்லப்படுகின்றன.

#### 3.10.3.2. பின்தொடர் அளவீடும் ஏற்பிசைவும்

கம்பனி வழிவரா நிதிப் பொறுப்புகளை ஏனைய நிதிப் பொறுப்புகளின் வகைப்படுத்தலில் வகைப்படுத்தியுள்ளன. அத்தகைய நிதிப் பொறுப்புகள் நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு அவற்றுடன் நேரடியாக ஏற்கப்படும் கொடுக்கல்வாங்கல்

கிரயங்கள் இருப்பின் அவை கூட்டப்படுகின்றன. ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து வட்டியுடனான கடன்கள் மற்றும் கடன் பெறல்கள் உட்பட இந் நிதிப்பொறுப்புகள் வினைத் திறன் வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. பொறுப்புகள் குறை ஏற்பிசைவு செய்யப்படுகையில் இலாபங்களும் நட்டங்களும் இலாப நட்டங்களாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.10.4 கடன் பெறல் கிரயம்

கடன் பெறல் கிரயங்கள் அவை ஏற்கப்படும் காலப்பகுதியில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

## 3.11. அரசாங்க மானியங்களும் மானியங்களும்

மானியங்கள் பெறப்படும் எனவும் கம்பனி சகல இணைந்த நிபந்தனைகளுடன் இணங்கும் என்ற நியாயமான உறுதிப்பாட்டில் அரசாங்கத்திடமிருந்தான மானியங்கள் நியாயப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

இறக்குமதிக் கிரயங்களுடன் தொடர்புபட்ட உர மானியங்கள் அவை ஈடுசெய்யப்படக் கூடிய கிரயங்களுடன் பொருந்தும் வகையில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஏற்கனவே செலவிடப்பட்ட இறக்குமதிக் கிரயங்களுக்கு ஈடுகொடுக்கும் உர மானியங்கள் மானியங்கள் பெறப்படுவதற்கான நியாயமான உறுதிப்பாட்டில் பெறவேண்டிய மானியமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஆதன, பொறி, உபகரணங்களுடன் தொடர்புபட்ட அரசாங்க மானியங்கள், பிற்போடப்பட்ட அரசாங்க மானியங்களாக நடைமுறைப் பொறுப்புகளில் உள்ளடக்கப்படுவதுடன் தொடர்புபட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட ஆயட்காலத்திற்கு நேர்கோட்டு முறையில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

## 3.12 கூட்டமைப்பு வரியும் பிற்போடப்பட்ட வரிகளும்

கம்பனி வருமான வரிகளுக்கு உட்பட்டதாகும். ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட தொகைகளிலிருந்து இறுதி வரி மாற்றமடையக்கூடிய வரி வருமானத்தின் மதிப்பீடுகளுக்கு வரி வருமானத்தின் மதிப்பீடுகளைச் சார்ந்து எதிர்பார்க்கப்பட்ட வரிகளுக்காக பொறுப்புகளைக் கம்பனி ஏற்பிசைவு செய்கின்றது. இவ் வேறுபாடானது அதன் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரியைத் தாக்கக் கூடியது. அத்தகைய வேறுபாடு நிர்ணயிப்புக் காலத்தின் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் தாக்கம் செலுத்தக் கூடியது.

காலப்பகுதிக்கான வரிச் செலவினங்கள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரியை உள்ளடக்கியதாகும். வரி ஏனைய விபரமான வருமானத்தில் அல்லது உரிமையாண்மையில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்படும் விடயங்கள் அல்லது ஏற்பிசைவு செய்யப்பட்ட விடயங்களுடன் தொடர்புபட்ட அளவு தவிர்ந்த அளவிற்கு ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. இச் சந்தர்ப்பத்தில், வரியும் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.12.1 நடைமுறை

நடைமுறை வருமான வரிக் கட்டணமானது, கடந்த ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய வரிக்கான ஏதேனும் சீராக்கங்களும் கம்பனிக்குப் பொருத்தமான அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியில் அமுலாக்கப்பட்ட அல்லது தொடர்ந்து அமுலாக்கப்பட்ட வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களின் அடிப்படையில் கணிப்பிடப்படும் வரி வருமானம் அல்லது நட்டத்தின் மீது எதிர்பார்க்கப்பட்ட செலுத்த வேண்டிய வரி அல்லது பெறவேண்டிய வரியாகும். உரிமை மூலதனத்துடன் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்பட்ட விடயங்களுடன் தொடர்பான நடைமுறை வருமான வரி இலாப நட்டத்தில் அல்லது உரிமை மூலதனத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

பொருத்தமான போது முகாமைத்துவம் வரி அதிகாரிகளுக்குச் செலுத்த வேண்டியதாக எதிர்பார்க்கப்பட்ட தொகையின் அடிப்படையில் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது. பொருத்தமான வேளையில் சந்தர்ப்பங்களிற்கு ஏற்றவாறு வரிப் பிரமாணங்கள் விலக்கப்பட்டு ஏற்பாடுகள் முறைப்படி மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.12.2 பிற்போடப்பட்ட வரி

நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கொண்டு செல்லல் தொகைக்கும் வரி நோக்கங்களுக்காக அல்லது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வரி அடிப்படைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் கொண்டு செல்லப்படும் தொகைகள் தவிர்ந்தவைக்கும் இடையில் ஏற்படும் தற்காலிக வரி வேறுபாடுகள் பிற்போடப்பட்ட வரியாகும்.

கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டின் போது அல்லது வரி இலாப அல்லது நட்டத்தைத் தாக்கும் வேளையில் ஓர் வியாபார ஒருங்கிணைப்பு தவிர்ந்த ஓர் கொடுக்கல் வாங்கலில் ஓர் சொத்து அல்லது பொறுப்பில ஆரம்ப ஏற்பிசைவிலிருந்து ஏற்படுமாயின் பிற்போடப்பட்ட வரி கணக்கீடு செய்யப்பட மாட்டாது. அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவுத் திகதியில் சட்டவாக்கமாக்கப்பட்ட வரி வீதத்தைப் பயன்படுத்துவதுடன் மூலமும் தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் தேறுகையில் பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகையில் அல்லது பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு தீர்க்கப்படுகையில் பிற்போடப்பட்ட வரி நிர்ணயிக்கப்படுகின்றது.

தற்காலிக வேறுபாடுகள் பயன்படுத்தப்படக் கூடிய அளவிற்கு எதிராக உள்ள எதிர்கால வரி இலாபத்திற்கு சாத்தியமாக உள்ள தொகை வரை மாத்திரமே பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் வருமான வரிகள் விதித்த அதே வரி அதிகாரியுடன் தொடர்புபடுகையில் நடைமுறை வரிச் சொத்துக்கள் நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக எதிரீடு செய்யப்படுவதற்காக ஓர் சட்ட அமுலாக்கம் இருக்குமாயின் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் எதிரீடு செய்யப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகை ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு போதிய வரி இலாபம் சகல அல்லது பகுதியளவிலான பிற்போடப்பட்ட வரிச் சொத்து பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிப்பதற்குச் சாத்தியம் இல்லாத வரைக்கும் குறைக்கப்படுகின்றது. ஏற்பிசைவு செய்யப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியின் போதும் மீள் மதிப்பிடப்பட்டு அறவிடப்பட உள்ள பிற்போடப்பட்ட வரிச் சொத்து அனுமதிக்கும் எதிர்கால வரி இலாபங்களுக்குச் சாத்தியமான வரையான அளவிற்கு ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஓர் பிற்போடப்பட்ட வரிச் சொத்து பயன்படுத்தப்படாத வரி இழப்புகள், வரிக் கடன்கள் மற்றும் பயன்படுத்தப்படக் கூடிய அளவிற்கு எதிராக கிடைக்கப்பெற்ற எதிர்கால வரிப் பொறுப்புகளுக்குச் சாத்தியமான அளவு வரையான கழிக்கப்படக் கூடிய தற்காலிக வேறுபாடுகளில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதிக்கும் மீளாய்வு செய்யப்பட்டு தொடர்புபட்ட வரி நலன்கள் தேறும் வரையில் தற்போது சாத்தியப்படாத அளவிற்குக் குறைக்கப்படும்.

### 3.13 ஊழிய நலன்கள்

கம்பனி விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களையும் விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டத்தையும் கொண்டது.

### 3.14 விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

பின் - ஊழிய நலன் திட்டத்தின் கீழ் வேறான ஓர் நிறுவகத்திற்கு நிலையான பங்களிப்புகளைச் செலுத்துமாயின் இது விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் ஆகும். எதிர்காலப் பங்களிப்பை மேற்கொள்வதற்கு கம்பனியானது சட்ட அல்லது நிர்மாணக் கடப்பாடுகளைக் கொண்டமையவில்லை. விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் ஊழியர்களால் சேவைகள் வழங்கப்பட்ட காலப்பகுதியிலான வருமானக் கூற்றில் ஓர் ஊழிய நலனாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.14.1 ஊழியர் சேமலாப நிதியம்

அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தின் 12% ஐயும் 10% ஐயும் கம்பனியும் ஊழியர்களும் பங்களிப்புச் செய்கின்றன. இலங்கை மத்திய வங்கியால் முகாமைத்துவம் செய்யப்படும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தொகுதியின் ஏனைய கம்பனிகளும் அவற்றின் ஊழியர்களும் முறையே 12% ஐயும் 8% ஐயும் பங்களிப்புச் செய்கின்றன.

### 3.15.1. ஊழியர் நம்பக்கை நிதியம்

இலங்கை மத்திய வங்கியால் முகாமைத்துவம் செய்யப்படும் ஊழியர் நம்பக்கை நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தின் 3% ஐ கம்பனி தொகுதி பங்களிப்புச் செய்கின்றது.

விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புகள் ஏற்கப்பட்டவாறு வருமானக் கூற்றில் ஓர் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.15.3 விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டம்

ஓர் விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் தவிர்ந்த விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டம் பின் - ஊழிய நலன் திட்டமாகும். கம்பனி 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டக் கொடுப்பனவின் கீழான நலன்களை மேற்கொள்வதற்கு பொறுப்புடையதாகும். விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டங்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட பொறுப்பு அறிக்கையிடற் திகதியில் உள்ளவாறான விதந்துரைக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாகும். திட்டமிப்பட்ட அலகுக் கடன் (PUC) முறை LKAS 19 – "ஊழிய நலன்" ஆல் பரிந்துரைக்கப்பட்ட முறையைப் பயன்படுத்தியே அறிக்கையிடற் திகதியில் உள்ளவாறான தகைமை உடைய பதிவாளர் மூலம் விதந்துரைக்கப்பட்ட நலன் கடப்பாடு கணிக்கப்படுகின்றது. இத்தகைய உள்ளபடியான பெறுமதிகள் ஆண்டிற்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளபடியான எடுகோள்களின் மாற்றங்கள் மற்றும் ஏற்கப்பட்ட தகைமை பெற்ற சீராக்கங்களிலிருந்து உருவாகும் உள்ளபடியான இலாபங்களும் நட்டங்களும் அவை உருவான காலத்தின் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஊழியர்களின் நலன்கள் தொடர்பான கம்பனி கடப்பாடுகளைக் கணிக்கையில் ஏற்படும் உண்மையான மதிப்பீட்டிலிருந்து எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டங்கள் ஏனைய விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் தொடர்புபட்ட பதவியணி கிரயமும் ஏனைய கிரயமும் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஊழியர்களின் ஓய்வூதிய நலன்கள் மீது எழும் கம்பனியின் பொறுப்பு வெளியில் இருந்து நிதியிடப்படுவதில்லை.

**3.15.4. குறுங்கால ஊழிய நலன்**

ஊழியர்களால் வழங்கப்படும் தொடர்புபட்ட சேவைகளுக்கான செலுத்தப்பட வேண்டிய ஓர் கழிவு செய்யப்படாத தொகை மீது குறுங்கால ஊழியர் நலக் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன.

**3.16 ஏற்பாடுகளும் நிகழத்தக்க பொறுப்புகளும்**

முன்னைய சம்பவத்தின் விளைவாக தற்போதைய சட்ட அல்லது நிர்மாணக் கடப்பாட்டை கம்பனி கொண்டு தொகைகள் நம்பகரமான முறையில் மதிப்பிடப்பட்டு கடப்பாடுகள் தீர்க்கப்படுவதற்கு கம்பனியிலிருந்து பொருளாதார மூலங்களின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியம் இருக்கையில் செயற்பாட்டுச் செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

தற்போதைய கடப்பாடுகளுடன் தொடர்புடைய உறுதியின்மை மற்றும் இடர்கள் உள்ளடங்கலாக அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான மிகவும் நம்பகரமான சான்றின் அடிப்படையில் தற்போதைய கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு மதிப்பீட்டுத் தேவைப்பாட்டில் ஏற்பாடுகள் அளவிடப்படுகின்றன.

**3.17 மூலதனக் கடப்பாடுகளும் நிகழத்தக்கவையும்**

நிலையில்லாத எதிர்காலச் சம்பவங்களால் நிலைப்பாடு மாத்திரம் உறுதிப்படுத்தப்பட்ட அல்லது தற்போதைய கடப்பாடுகள் பொருளாதார நலன்களின் மாற்றம் சாத்தியமற்ற அல்லது நம்பகரமான முறையில் அளவிடப்பட முடியாதவை நிகழத்தக்க பொறுப்புகளாகும். கம்பனியின் மூலதனக் கடப்பாடும் நிகழத்தக்க பொறுப்புகளும் நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள் தொடர்பாக வெளிப்படுத்தப்படுகின்றன.

**3.18 ஐந்தொகைத் திகதியின் பின்னரான சம்பவங்கள்**

ஐந்தொகைத் திகதியின் பின்னரான சம்பவங்களின் பொருண்மை நிலை கருத்திற்கொள்ளப்பட்டு முறையான சீராக்கங்களும் ஏற்பாடுகளும் தேவையான போது நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

சகல நிகழத்தக்க பொறுப்புகளும் மூலவளங்களின் வெளிப்பாய்ச்சல்களும் பின்தங்கி இருந்தாலன்றி நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக வெளிப்படுத்தப்படுகின்றன.

**4. காசுப்பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்று ''நேர் முறை'' யைப் பயன்படுத்தி இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 7) - காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்றது. காசும் காசிற்குச் சமனாவைகளும் பெறுமதியில் முக்கியமாகக் கருதப்படாத இடரிற்கு உட்பட்ட மற்றும் காசுத் தொகைகளாக உடனடியாக மாற்றப்படக் கூடிய உயர் திரவ முதலீகள், குறுங்காலத் தவணைகளை உள்ளடக்கியுள்ளன. கையிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள வைப்புகள், அழைப்பு மற்றும் குறும் அறிவித்தலிலுள்ள காசு என்பவற்றையும் காசும் காசிற்குச் சமனானவை உள்ளடக்கும்.

**5. வருமான ஏற்பிசைவு**

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் தேறிய மீதியில் குறிப்பிடப்பட்டவை, பொருட்களின் விற்பனைக்காகப் பெறவேண்டிய தொகைகளைப் பிரதிநிதித்துவம் செய்பவை, பெறவேண்டியவைகள் அல்லது பெறப்பட்ட மானியப் பெறுமதியில் வருமானம் கணிப்பிடப்படுகின்றது. கம்பனியின் வருமானத் தொகை நம்பகரமான முறையில் கணிப்பிடப்படக் கூடுமான போதிலும் கம்பனிக்கு எதிர்காலப் பொருளாதார நலன்கள் உட்பாய்ச்சப்படக்கூடிய சாத்தியம் உள்ளபோதும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

பின்வரும் குறித்த அளவுகோல்கள் வருமான ஏற்பிசைவு நோக்கங்களுக்காக கம்பனியால் பயன்படுத்தப்படுகின்றன.

**5.1.1 உர விற்பனை**

அரசாங்கத்தால் குறிப்பாகக் கூறப்பட்டுள்ள அரச முகவரகங்களுக்கு நேர் உரங்களையும் கலப்பு உரங்களை மொத்த, சில்லறைச் சந்தைகளிலும் கம்பனி இறக்குமதி செய்து விற்பனை செய்கின்றது. நுகர்வோருக்கு இடர்களும் நல்ன்களும் மாற்றப்படும் தருணத்தில் பொருட்களின் விற்பனை ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. இது களஞ்சியத்திலிருந்து கொள்வனவாளரின் வாகனத்திற்கு ஏற்றப்படும் தருணமாகும்.

**5.2 வட்டி வருமானம்**

வினைத்திறனான வட்டி முறையைப் பயன்படுத்தி வருமானக் கூற்றில் திரள்கையில் வட்டி வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**5.3 வாடகை வருமானம்**

குத்தகைக் காலப்பகுதியின் போது அட்டுறு அடிப்படையில் வாடகை வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**5.4 ஆதன, பொறி மற்றும் உபகரணங்களிள் கைதவிர்ப்பு மீதான இலாபம் மற்றும் இழப்புகள்**

கைதவிர்க்கப்பட்டவற்றின் இலாபங்களும் நட்டங்களும் கொண்டு செல்லல் தொகை, மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்துடன் விற்பனைப் பெறுவனவு ஒப்பிடப்பட்டே நிர்ணயிக்கப்பட்டு விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**5.5 ஏனைய வருமானம்**

அட்டுறு அடிப்படையில் ஏனைய வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**6. செலவினம்**

வினைத்திறனான நிலையில் பேணப்படும் ஆதன, பொறி உபகரணங்கள் மற்றும் வியாபாரத்தின் போது ஏற்கப்படும் சகல செலவினங்களும் ஆண்டிற்கான இலாபக் கணிப்பீட்டிற்காக வருமானத்திற்கு எதிராகச் சாட்டப்பட்டுள்ளன. வருமானக் கூற்றின் தயாரிப்பு நோக்கங்களுக்காக செலவினச் செயற்பாட்டு முறை பயன்படுத்தப்படுவதனால் கம்பனியின் செயற்பாட்டுக் கூறுகள் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுள்ளன என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும்.

வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்காக நிலையான தன்மையிலான சொத்துக்களின் கொள்வனவு, விஸ்தரிப்பு அல்லது முன்னேற்றுவதற்காக அல்லது வியாபாரத்தின் உழைப்பின் இயலளவை அதிகரிக்கும் நோக்கத்திற்காக ஏற்கப்பட்ட செலவினம் மூலதனச் செலவினமாகக் கருதப்படுகின்றது.

திருத்த வேலைகள் மற்றும் புதுப்பித்தல்களுக்காக அச் செலவினம் ஏற்பட்ட ஆண்டிலேயே வருமானக் கூற்றில் சாட்டப்படுகின்றன. கம்பனியால் உழைக்கப்பட்ட இலாபம் வரிச் செலவினத்திற்கு முன்னரும் சகல அறிந்த பொறுப்புகள், சேத இழப்புகள் மற்றும் ஆதன, பொறி, உபகரணங்களின் பெறுமானத்தேய்வுகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்தும் உள்ளவையாகும்.

## 7. கடப்பாடுகள்

அறிக்கையிடற் காலப்பகுதியில் உள்ள சகல பொருண்மையான கடப்பாடுகளும் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளில் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

## 8. பங்கிலாபங்கள் மீதான பிடித்து வைத்தல் வரி (WHT)

துணைக் கம்பனிகளின் வரிக்குட்பட்ட இலாபத்திலிருந்து பகிரப்பட்ட பங்கிலாபங்கள் வளத்தின் 10% இல் கழிக்கப்படுகின்றன.

## 9. முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் நடுநிலைத் தீர்மானங்களும்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமைத்துவம் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானச் செலவினங்களின் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டிற்காக பல தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்கின்றன. நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பின் போதான முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கையில் பின்வரும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

### 9.1 பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் ஏற்பிசைவு

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் பயன்படுத்தப்படக் கூடிய அளவிற்கு எதிராக எதிர்கால வரி வருமானத்தின் சாத்தியத்தின் ஓர் மதிப்பீட்டின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் அளவு ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களின் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டின் மீது முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

### 9.2 பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம்

முகாமைத்துவம் அதன் சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதாரப் பயன்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் பெறுமானத்தேய்விடத்தக்க சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்கின்றது. இம் மதிப்பீடுகளின் நிலையற்ற தன்மைகள் தகவல் தொழிநுட்ப உபகரணங்கள் மற்றும் மென்பொருட்களின் பயன்பாட்டை மாற்றியமைக்கக் கூடிய தொழிநுட்ப வழக்கிழப்புடன் தொடர்புபட்டவையாகும்.

## 10. விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டம்

பல எடுகோள்களைப் பயன்படுத்தி உள்ளபடியான அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் பல எண்ணிக்கையிலான காரணிகளை தற்போதைய விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டக் கடப்பாடுகளின் பெறுமதி சார்ந்துள்ளது. கழிவு வீதம் உள்ளடங்கலாக தேறிய கிரயம் மற்றும் விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டக் கடப்பாடுகளை நிர்ணயிக்கையில் எடுகோள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ் எடுகோள்களில் ஏதேனும் மாற்றம் இருப்பின் போதைய விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டக் கடப்பாடுகளின் கொண்டு செல்லல் பெறுமதியில் தாக்கத்தை விளைவிக்கும்.

## 11. இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLFRS/LKAS) முதல் பிரயோகம்

2013 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையிடற் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLFRS) இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட முதலாவது நிதிக் கூற்றாகும். 2012 மார்ச் 31 இல் முடிவுற்ற அறிக்கையிடற் காலப்பகுதி வரையான கடந்த அறிக்கையிடற் காலப்பகுதிகளில் 2012 மார்ச் 31 வரை அமுலாகும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLAS), இன் பிரகாரம் அதன் நிதிக்கூற்றுக்களைக் கம்பனி தயாரித்திருந்தது.

இந் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில், நிதி நிலைமையின் ஆரம்பக் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS) இற்கு மாற்றப்பட்ட திகதியான 2011 ஏப்ரல் 1 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டது. திகதியான 2011 ஏப்ரல் 1, 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான அறிக்கையிடற் காலப்பகுதிக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் SLAS நிதிக் கூற்றுக்கள் SLFRS நிதிக் கூற்றுக்களாக மீளமைக்கப்பட்டதன் முக்கிய சீராக்கங்களை இக் குறிப்பு விளக்குகின்றது.

### 11.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS)1 இல் வழங்கப்பட்ட விலக்களிப்புகள் - இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS) முதல் தடவையாகப் பின்பற்றப்படும் போதும் ஏனைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS)களின் பின்னோக்கிய பிரயோகங்களும்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS) இன் பிரகாரம் முதல் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் கம்பனி பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS)1 - இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS) முதல் தடவையாகப் பின்பற்றப்படும் போதும் ஏனைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS)களின் பின்னோக்கிய பிரயோகங்களின் போதுமான மாற்று விலக்களிப்புகளின் நன்மைகளைப் பெற்றுள்ளது.

#### 11.1.1 பிரேரிக்கப்பட்ட கிரயமாக மீள் மதிப்பீடு

கம்பனியின் ஆதன, பொறி, உபகரணங்கள் 2012 மார்ச் 31 இற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் மீள் மதிப்பீட்டுத் தொகையில் கொண்டுசெல்லப்படுகின்றன. அம் மீள் மதிப்பீட்டுத் தொகையைக் கம்பனி மீள்மதிப்பீட்டுத் திகதியில் நியாயப் பெறுமதிக்கு விரிவாக ஒப்பிடப்பட வேண்டியதன் காரணமாக மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் பிரேரிக்கப்பட்ட கிரயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

#### 11.1.2 பின்வரும் மாற்று விலக்களிப்புகள் அதிகாரசபைக்கு உரித்தானவை அல்ல.

(i) SLFRS 4 – காப்புறுதி ஒப்பந்தங்கள், இப் பிரயோகம் கம்பனிக்கு உரித்தானதல்ல.

(ii) LKAS 39 – இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் கம்பனி நிதி உபகரணங்கள் மற்றும் நிதிச் சொத்துக்களின் விற்பனைக்காகக் கொண்டிராமையால் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதி உபகரணங்களின் தெளிவான குறிப்பு

(iii) IFRIC 4 – கம்பனி அத்தகைய ஒழுங்குகளை கொண்டிராமையால் ஒழுங்கில் ஓர் குத்தகை உள்ளதா என்பதை நிர்ணயித்தல்.

(iv) LKAS 19 – ஊழியர் நலன்கள், விபரமான வருமானக் கூற்றில் உள்ளபடியான இலாப நட்டங்களை கம்பனி ஏற்பிசைவு செய்துள்ளமை.

(v) LKAS 21 – மாற்றலின் போது ஏற்படும் திரண்ட வேறுபாடுகள், இதுவரையில் கம்பனி வெளிநாட்டுத் தொழிற்பாட்டைக் கொண்டிராமை.

(vi) LKAS 27 - துணைக் கம்பனி, கூட்டாக நிர்வகிக்கப்படும் அமைப்புகளிலும் ஒன்றித்த அமைப்புகளிலுமான முதலீடுகள், கம்பனி கூட்டமைப்புகளைக் கொண்டிராமை.

(vii) துணைக் கம்பனிகளும் ஒன்றித்த அமைப்புகளைக் கொண்டிராமையால் துணைக் கம்பனிகளினதும் ஒன்றித்த அமைப்புகளினதும் கூட்டு முயற்சிகளினதும் சொத்துக்களும் பொறுப்புகளும்.

(viii) LKAS 32 - கூட்டு நிதிப் பொறிகள், கம்பனி கூட்டு நிதிப் பொறிகளைக் கொண்டிராமை.

(ix) ஆதன, பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்ட அதிகாரபூர்வமற்ற பொறுப்புகளை அகற்றல், அதிகாரசபை அதிகாரபூர்வமற்ற பொறுப்புகளை அகற்றுவதற்கும், மீளமர்வுக் கிரயங்கள் மற்றும் தொடர்புபட்ட பொறுப்புகளையும் இனங்கண்டு உள்ளடக்குவதற்கும் கம்பனி முறையான நடைமுறையைக் கொண்டிருக்கவில்லை.

(x) IFRIC 12 – சேவைச் சலுகை ஒழுங்குகள், கம்பனி அத்தகைய ஒழுங்கைக் கொண்டிராமை.

**11.1.3. பின்வரும் சட்டவாக்க விதிவிலக்குகள் கம்பனிக்குப் பொருந்தாதவையாகும்.**

i. நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகளை குறை ஏற்பிசைவு செய்தல்.

ii. இழப்பீட்டுக் கைகாப்புக் கணக்கீடு (Hedge Accounting)

**11.1.2. பின்னோக்கிய பிரயோகத்திலிருந்து சட்டவாக்கங்களின் விதிவிக்குகள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRSs) படியான முதல் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பின் போது பின்வரும் பின்னோக்கிய பிரயோகத்திலிருந்து சட்டவாக்கங்களின் விதிவிலக்குகளை கம்பனி தேர்ந்தெடுத்துள்ளது.

**11.1.3. இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs) மாற்றப்படுவதை தெளிவூட்டல்**

கம்பனி இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு மாற்றலான 2011 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRSs) ஆரம்பக் கூற்றும் 2012 மார்ச் 31 இல் முடிவுற்ற அறிக்கைக் காலப்பகுதிக்கான ஒப்பீட்டுத் தகவலுடன் 2013 மார்ச் 31 இல் முடிவுற்ற அறிக்கைக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் குறிப்பு 2.1 முதல் 11.1.2 இல் விதந்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRSs) அடிப்படையில் கடந்த அறிக்கைக் காலப்பகுதிகளின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் தேவையான சீராக்கங்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRSs) பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமம் (SLASs) இலிருந்து (SLFRSs) களுக்கான மாற்றங்களின் தாக்கம் இணக்கங்களின் குறிப்புகள் மற்றும் விபரமான வருமானக் கூற்று, மூலதன இணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**12 வழங்கப்பட்டு எனினும் அமுற்படுத்தப்படாத புதிய கணக்கீட்டு நியமங்கள்**

நியமங்கள் வழங்கப்பட்டு, தொகுதியின் நிதிக்கூற்றுக்களின் வியோகிப்புத் திகதி வரை அமுற்படுத்தப்பட்டிராதவை கீழே பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. இநி நியமங்களின் பட்டியற்படுத்தலும் வழங்கப்பட்ட விளக்கங்களும் எதிர்காலத் திகதியில் பிரயோகிக்கப்படுகையிலான செயற்பாடு அல்லது நிதி நிலைமை, வெளிப்படுத்தல்களின் போதான ஓர் தாக்கத்தை நியாயமாக எதிர் நோக்கும் ஓர் தொகுதியினதாகும்.

SLFRS 9 – நிதி உபகரணங்கள்

SLFRS 13 – நியாயப் பெறுமதி அளவீடு

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| **13** | **வருமானம்** | | |
| | மொத்த வருமானம் | 866,809,058 | 982,118,071 |
| | | **866,809,058** | **982,118,071** |
| **14 அ** | **விற்பனைக் கிரயம் மீதான மானியம்** | **8,385,934,065** | **9,022,943,917** |

நிறுவக மேந்தலைகளிற்கான மானியம் தவிர்ந்த மஹிந்த சிந்தனை உர மானிய முறைமை அமுலாக்கம் தொடர்பாக உரங்களுக்காக ஏற்கப்படும் நேரடிச் செலவினத்தை மீளளிப்பதற்கான திறைசேரி மானியங்களை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### 14 ஆ விற்பனைக் கிரயம்

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| கொள்வனவுகள் | (குறிப்பு 14ஆ.1) | 8,889,258,462 | 9,551,120,537 |
| நேர் செலவினங்கள் | (குறிப்பு 14ஆ.2) | 142,312,403 | 214,869,834 |
| உற்பத்திக் கிரயம் | | 9,031,570,865 | 9,765,990,371 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான முடிவுப் பொருட்கள் | | 144,605,717 | 180,490,161 |
| இருப்பு பற்றாக்குறை/ மிகை | (குறிப்பு 14ஆ.3) | 110,042 | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான முடிவுப் பொருட்கள் | | (173,460,034) | (144,605,717) |
| | | 9,002,826,589 | 9,801,874,816 |
| **பொது மேந்தலைகள்** | | 41,591,646 | 33,871,096 |
| | | **9,044,418,235** | **9,835,745,912** |

குறிப்பு 14ஆ.1 **கொள்வனவுகள்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| உர இறக்குமதிப் பெறுமதி | 8,977,230,681 | 8,704,220,755 |
| ஓப்பந்த ஓழிய ஊதியம் | 33,707,325 | 38,659,789 |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) | 8,690,949 | 9,819,743 |
| சமூகப் பொறுப்பு வரி | - | 1,803,452 |
| போக்குவரத்து கட்டணங்கள் | 115,585,414 | 86,670,403 |
| பொதி செய் பொருட்கள் | 4,650,168 | 243,783 |
| நாணய மாற்று நட்டம் | - | 709,702,613 |
| நாணய மாற்று இலாபம் | (250,606,076) | - |
| | **8,889,258,462** | **9,551,120,537** |

அடைப்புக் குறிக்குள் உள்ள தொகை கழிப்பனவுகளைக் குறிக்கும்.

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

| | | 2012/13 | 2011/12 |
|---|---|---|---|
| 14.ஆ.2 | **நேர் செலவினங்கள்** | | |
| | ஊழிய கட்டணங்கள் | 4,893,398 | 5,245,366 |
| குறிப்பு 14 ஆ 2.1. | | | |
| | பிராந்தியக் களஞ்சிய செலவினம் | 60,042,898 | 87,820,884 |
| | மாவட்ட உரக் களஞ்சியங்களுக்கான போக்குவரத்துக் கட்டணங்கள் | 77,376,107 | 121,803,583 |
| | | **142,312,403** | **214,869,834** |

**14.ஆ.2.1 ஊழியக் கட்டணங்கள்**

| | 2012/13 | 2011/12 |
|---|---|---|
| ஊதியங்கள் | 2,663,220 | 2,813,395 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 321,995 | 337,607 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 80,499 | 84,402 |
| மேலதிக நேரம் மற்றும் 1/20 படிப்பணம் | 554,960 | 874,378 |
| பயன்படுத்தப்படாத பதவியணி லீவு மற்றும் ஊக்குவிப்புப் படிப்பணம் | 14,271 | 13,358 |
| பயன்படுத்தப்படாத மருத்துவ லீவு | 196,303 | 230,131 |
| நலன்புரி மற்றும் மருத்துவம் | 524,114 | 65,907 |
| உணவுப் பணமும் இணைந்த படிப்பணமும் | 12,485 | 53,111 |
| சீருடைப் படிப்பணம் | - | 13,272 |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 525,552 | 759,805 |
| | **4,893,398** | **5,245,366** |

| **14.ஆ.3 இருப்பு பற்றாக்குறை/ மிகை** | **மானிய விலையில்** | **கிரயத்தில்** |
|---|---|---|
| இருப்பு பற்றாக்குறை | (2,847,003) | (43,013,200) |
| இருப்பு மிகை | 2,957,045 | 50,181,180 |
| | **110,042** | **7,167,980** |

**குறிப்பு : நீண்ட காலத்தின் பின்னர் நடாத்தப்பட்ட 100% பௌதீக மெய்மையாய்வில் இருப்புக் கிரயப் பற்றாக்குறை/ மிகை கண்டறியப்பட்டு முதல் வந்தது முதல் வெளியேறும் அடிப்படையில் பெறுமதியிடப்பட்டது.**

| | | 2012/13 | 2011/12 |
|---|---|---|---|
| **14.இ** | **நிறுவக மேந்தலைகள் மீதான மானியம்** | **190,388,603** | **206,843,175** |

மஹிந்த சிந்தனை உர மானியக் கொள்கை அமுலாக்கத்திற்காக நிர்வாகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கிரயத்திற்காக 2011/12 நிதியாண்டிற்காக ரூபா 1,500 இற்கு 137,895 மெட்ரிக் தொன்களுக்கும் 2012/13 நிதியாண்டிற்காக ரூபா 1,500 இற்கு 126,926 மெட்ரிக் தொன்களுக்கும் முறையே திறைசேரியால் வழங்கப்பட்ட மானியங்களின் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)

**15 ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| பெற்ற வாடகை | 1,177,400 | 988,194 |
| மீளளிக்கப்படாத கேள்வி வைப்புக்கள் | 335,050 | 493,800 |
| நூனாவித வருமானம் | 1,056,216 | 4,502,115 |
| ஆகற்றப்படக்கூடிய விடயங்களின் விற்பனை | 622,803 | 617,565 |
| அனுப்பிய பணப் பெறுவனவு | 18,042,676 | 21,942,014 |
| நிலையான சொத்து விற்பனை | - | 2,562,000 |
| | 21,234,145 | 31,105,688 |

| | | |
|---|---|---|
| **16 தேறிய நிதிக் கிரயம்** | **(1,758,422)** | **20,062,511** |

**16.a நிதி வருமானம்**

| | | |
|---|---|---|
| நிலையான வைப்புக்கள் மீதான வட்டி | 41,780,685 | 33,936,101 |
| ரிப்போ முதலீடுகள் | 13,994,533 | 25,512,448 |
| தேசிய வரி | 1,554,948 | - |
| பிடித்து வைத்தல் வரி | 4,642,298 | - |
| ஊழியர் கடன்கள் மீதான வட்டி | 538,762 | 371,952 |
| | **62,511,226** | **59,820,500** |

அடைப்புக் குறிக்குள் உள்ள தொகை கழிப்பனவுகளைக் குறிக்கும்.

**16.ஆ நிதிக் கிரயம்**

| | **2012/13** | **2011/12** |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 12,334,200 | 1,385,059 |
| தண்டப் பணம் | 65 | - |
| மேலதிகப் பற்று வட்டி | 2,224,617 | 351,984 |
| குறுங்காலக் கடன் வட்டி | 24,290,320 | 20,479,028 |
| நீண்ட காலக்கடன் வட்டி | 1,650,141 | (1,237,639) |
| செலுத்தப்படாத உண்டியல் பெறுமதி வட்டி | 23,770,305 | 18,779,556 |
| | **64,269,648** | **39,757,989** |

| | | | |
|---|---|---|---|
| **17** | **வரிக்கு முன்னைய இலாபம்** | **181,928,588** | **314,143,499** |

பின்வருபவை உள்ளடங்கலாக சகல செலவினங்களும் கழிக்கப்பட்டதை அடுத்தே வரிக்கு முன்னைய இலாபம் கணிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஆதன இயந்திர உபகரணங்கள் மீதான பெறுமானத்தேய்வு (குறிப்பு 20 ) | 15,358,640 | 11,981,743 |
| கணக்காய்வாளர்களின் ஊதியம் (குறிப்பு 17.1) | 300,000 | 548,747 |
| பணிப்பாளர் கட்டணங்களும் ஊதியங்களும் (குறிப்பு 17.2) | 1,661,849 | 1,505,150 |
| சம்பளங்களும் ஊதியங்களும் (குறிப்பு 17.3) | 47,938,979 | 45,909,262 |
| செலுத்தத் தவறிய கடன்பட்டோர் படிப்பணம் | 511,220 | 1,679,187 |

**17.1 கணக்காய்வு சேவைகள்**

| | | |
|---|---|---|
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 300,000 | 532,696 |
| கணக்காய்வுடன் தொடர்புடைய சேவைகள் | - | 16,051 |
| | **300,000** | **548,747** |

**17.2 பணிப்பாளர் கட்டணங்கள் மற்றும் ஊதியங்கள்**

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் படிப்பணம் | 1,462,849 | 1,505,150 |
| பணிப்பாளர் பயணப் படிப்பணம் | 200,100 | |
| | **1,661,849** | **1,505,150** |

**17.3 சம்பளங்களும் ஊதியங்களும்**

| | | | |
|---|---|---|---|
| நிறைவேற்றுப் பதவியணி ஊதியம் | குறிப்பு 17.3.1 | 11,398,188 | 11,895,555 |
| எழுதுவினைஞர் பதவியணி ஊதியம் | குறிப்பு 17.3.2 | 35,880,667 | 32,641,685 |
| தலைமை அலுவலக அமைய/ பயிலுனர் ஊதியம் | குறிப்பு 17.3.3 | 660,124 | 1,372,022 |
| | | **47,938,979** | **45,909,262** |

(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன

**2013.03.31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பதவியணி சம்பளங்களும் ஊதியமும்**

| குறிப்பு | 17.3.1 நிறைவேற்றுப் பதவியணி | 17.3.2 எழுதுவினைஞர் பதவியணி | 17.3.3 அமைய/ பயிலுனர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சம்பளங்கள் | 7,135,209 | 20,260,255 | 469,950 | 27,865,415 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 856,225 | 2,431,086 | 56,394 | 3,343,706 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 214,056 | 607,772 | 14,099 | 835,926 |
| பயன்படுத்தப்படாத குறும் லீவு மற்றும் ஊக்குவிப்பு | - | 152,135 | - | 152,135 |
| மேலதிக நேரம் மற்றும் 1/20 படிப்பணம் | 347,183 | 5,466,994 | 119,681 | 5,933,858 |
| பயன்படுத்தப்படாத மருத்துவ லீவு | 692,210 | 1,364,457 | - | 2,056,667 |
| நலன்புரி மற்றும் மருத்துவம் | 39,032 | 178,454 | - | 217,485 |
| இணைந்த படி மற்றும் உணவுப் பணம் | 3,595 | 662,845 | - | 666,440 |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 2,110,678 | 4,756,669 | - | 6,867,347 |
| **மொத்தம்** | **11,398,188** | **35,880,667** | **660,124** | **47,938,979** |
| **2012.03.31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பதவியணி சம்பளங்களும் ஊதியமும்** | | | | |
| சம்பளங்கள் | 6,813,805 | 17,483,846 | 1,247,618 | 25,545,269 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 817,657 | 2,098,062 | 36,741 | 2,952,459 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 204,414 | 524,515 | 9,087 | 738,016 |
| பயன்படுத்தப்படாத குறும் லீவு மற்றும் ஊக்குவிப்பு | - | 144,791 | - | 144,791 |
| மேலதிக நேரம் மற்றும் 1/20 படிப்பணம் | 1,107,208 | 6,107,569 | 78,577 | 7,293,353 |
| பயன்படுத்தப்படாத மருத்துவ லீவு | 563,896 | 1,170,631 | - | 1,734,526 |
| நலன்புரி மற்றும் மருத்துவம் | 135,548 | 618,618 | - | 754,166 |
| இணைந்த படி மற்றும் உணவுப் பணம் | 2,253,028 | 546,178 | - | 2,799,206 |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு | - | 3,894,387 | - | 3,894,387 |
| சீருடைப் படிப்பணம் | - | 53,088 | - | 53,088 |
| **மொத்தம்** | **11,895,555** | **32,641,685** | **1,372,022** | **45,909,262** |

| | | **2012/13** | **2011/12** |
|---|---|---|---|
| **18** | **வருமான வரிச் செலவினங்கள்** | | |
| | நடைமுறை வரிச் செலவினங்கள் | 49,980,826 | 92,886,826 |
| | பிற்போடப்பட்ட வரிச் செலவினங்கள் | 8,765,039 | 4,844,240 |
| | | **58,745,864** | **97,731,067** |

**18.1 கணக்கீட்டு இலாப விளைவிற்கும் நடைமுறை வரிச் செலவினத்திற்கும் இடையிலான இணக்கம்**

| | 2012/13 | 2011/12 |
|---|---|---|
| **வரிக்கு முன்னைய கணக்கீட்டு இலாபம்/ (நட்டம்)** | 181,928,588 | 314,143,499 |
| நிலையான மற்றும் ரிப்போ முதலீட்டிற்கான வட்டி | (55,775,218) | (59,820,500) |
| அனுமதிக்கப்படாத விடயங்களின் கூட்டுமொத்தம் | 20,519,517 | 19,996,120 |
| அனுமதிக்கப்பட்ட விடயங்களின் கூட்டுமொத்தம் | (30,142,403) | (5,235,671) |
| ஏனைய வளங்களிலிருந்தான வருமானம் | 61,972,464 | 62,655,217 |
| **வியாபார அல்லது வர்த்தக இலாபம்/ (நட்டம்)** | **178,502,949** | **331,738,665** |
| **நியதிச்சட்ட வருமானக் கூட்டுத்தொகை** | **178,502,949** | **331,738,665** |
| **மதிப்பீட்டு வருமானம்/ வரி வருமானம்** | **178,502,949** | **331,738,665** |
| 28% நியதிச்சட்ட வரி வீதத்தில் விதிக்கப்பட்ட வரி | 49,980,826 | 92,886,826 |
| **ஆண்டிற்கான வழமையான நடவடிக்கைகள் மீதான நடைமுறை வரி** | **49,980,826** | **92,886,826** |

அடைப்புக் குறிக்குள் உள்ள தொகை கழிப்பனவுகளைக் குறிக்கும்.

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

## 19 தலா ஒரு பங்கிற்கான உழைப்பு

தலா ஒரு பங்கிற்கான உழைப்பு அடிப்படை ஆண்டிற்கான தேறிய இலாபத்தை ஆண்டின் போது சாதாரண பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் சாதாரண பங்குகளின் நிறுத்தல் சராசரி எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது.

| | 2012/13 | 2011/12 |
|---|---|---|
| **19 அ** ***தொகுதி எண்ணாகப் பயன்படுத்தப்பட்ட தொகை*** | | |
| சாதாரண பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேறிய இலாபம் (ரூபா) | 123,182,723 | 216,412,432 |
| ***பகுதி எண்ணாகப் பயன்படுத்தப்பட்ட சாதாரண பங்குகள்*** | | |
| வழங்கப்பட உள்ள நிறுத்தல் சராசரி எண்ணிக்கையிலான சாதாரண பங்குகள் | 10,000,000.000 | 10,000,000.000 |
| **தலா ஒரு பங்கிற்கான அடிப்படை உழைப்பு** | **12.32** | **21.64** |

## 20 ஆதன, பொறி மற்றும் உபகரணங்கள்

| கிரயம் | இறையில் காணி | கட்டிடங்கள் | பொறிகளும் இயந்திரங்களும் | மோட்டார் வாகனங்கள் | தளபாடங்களும் பொருத்திகளும் | அலுவலக உபகரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **01 04 2011 இல் உள்ளவாறான மீதி** | 90,000,000 | 116,724,043 | 15,139,787 | 25,080,503 | 3,727,747 | 4,325,597 | **254,997,677** |
| சேர்ப்பனவுகள் | - | - | 391,460 | 9,996,000 | 205,398 | 550,351 | 11,143,209 |
| கைதவிர்ப்புகள் | | - | | (1,200,000) | - | - | (1,200,000) |
| **31 03 2012 இல் உள்ளவாறான மீதி** | **90,000,000** | **116,724,043** | **15,531,247** | **33,876,503** | **3,933,145** | **4,875,948** | **264,940,887** |
| சேர்ப்பனவுகள் | - | 14,899,843 | 242,149 | 12,550,000 | 327,082 | 2,473,564 | 30,492,638 |
| கைதவிர்ப்புகள் | - | - | - | - | - | - | - |
| **31 03 2013 இல் உள்ளவாறான மீதி** | **90,000,000** | **131,623,886** | **15,773,397** | **46,426,503** | **4,260,227** | **7,349,512** | **295,433,525** |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | | |
| 01 ஏப்ரல் 2011 இல் உள்ளவாறான மீதி | | 20,546,734 | 11,623,930 | 9,449,062 | - | 2,531,359 | 44,151,085 |
| ஆண்டிற்கானவை | | 5,836,202 | 328,500 | 4,936,201 | 393,323 | 487,517 | 11,981,743 |
| கைதவிர்ப்புகள்/ சீராக்கங்கள் | | - | - | - | - | - | - |
| **31 மார்ச் 2012 இல் உள்ளவாறான மீதி** | | **26,382,936** | **11,952,430** | **14,385,263** | **393,323** | **3,018,876** | **56,132,828** |
| ஆண்டிற்கானவை | | 6,564,639 | 295,716 | 7,223,090 | 414,542 | 860,654 | 15,358,640 |
| **31 மார்ச் 2013 இல் உள்ளவாறான மீதி** | | **32,947,575** | **12,248,146** | **21,608,352** | **807,865** | **3,879,529** | **71,491,467** |

| **தேறிய கொண்டுசெல்லல் பெறுமதிகள்** | | **31.04 2013** | **31.04 2012** | **2011 ஏப்ரல் 01** |
|---|---|---|---|---|
| காணி | | 90,000,000 | 90,000,000 | 90,000,000 |
| கட்டிடங்கள | 5% | 98,676,311 | 90,341,107 | 96,177,309 |
| பொறிகளும் இயந்திரங்களும் | 20% | 3,525,250 | 3,578,817 | 3,515,857 |
| மோட்டார் வாகனங்கள் | 20% | 24,818,151 | 19,491,240 | 15,631,441 |
| தளபாடங்களும் பொருத்திகளும | 20% | 3,452,362 | 3,539,822 | 3,727,747 |
| அலுவலக உபகரணங்கள் | 10% | 3,469,983 | 1,857,073 | 1,794,238 |
| | | **223,942,057** | **208,808,059** | **210,846,592** |
| | | **223,942,057** | **208,808,059** | **210,846,592** |

அடைப்புக் குறிக்குள் உள்ள தொகை கழிப்பனவுகளைக் குறிக்கும்.

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

## 20. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இது 10 ஏக்கர் 30 ரூட் 20 பேர்ச் விஸ்தீரணமான ஹுணுபிட்டியவில் உள்ள கொழும்பு கொமர்ஷல் உர தலைமை அலுவலகமும் களஞ்சியத்தொகுதியும் அமைந்துள்ள காணியின் மீது 2007.03.12 அன்று மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

1996 இன் 29 ஆம் இலக்க பொது முயற்சிகள் புனர்வாழ்வு அதிகாரச்சட்டத்தினால் பொதுத் திறைசேரிக்கு மீளவழங்கப்பட்ட கம்பனியின் பங்குகளின் கீழ் மேற்குறித்த காணியின் உரித்து 1997 சனவரி 20 அன்றிலிருந்தான தனியார் முகாமைத்துவத்திலிருந்து களனி மாகாணச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கொழும்பு கொமர்ஷல் உரத்திற்கு ஆரம்பத்தில் உரித்தான காணியின் உரித்தைப் பெறும் செயற்பாடு நடைமுறையில் உள்ளது.

ஹுணுபிட்டியவில் உள்ள காணியும் ஆதனமும் கொழும்பு கொமர்ஷல் உரத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காகப் பயன்படுத்தப்பட்ட சீப்புகுளத்தில் உள்ள மாவட்ட உரக் களஞ்சியக் காணியின் குத்தகை ஒழுங்குகளோ அல்லது உரிமையோ சீராக்கப்பட்டிராமையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை.

### 20.1 முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்டு தற்போதும் பயன்பாட்டிலுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கிரயம்

| | **31.03.2012** | **31.03.2013** |
|---|---|---|
| பொறி மற்றும் உபகரணம் | 13,888,745 | 14,393,298. |
| மோட்டார் வாகனம் | 9,195,500 | 9,195,500. |
| அலுவலக உபகரணம் | 1,604,391. | 1,869,041 |
| | **24,688,636** | **25,457,839** |

## 21 நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை

| | 01 ஏப்ரல் 2011 இல் உள்ளவாறானது | 31 மார்ச் 2012 இல் உள்ளவாறானது | சேர்ப்பனவுகள் (கைதவிர்ப்புகள்) | 31.03.2013 இல் உள்ளவாறானது |
|---|---|---|---|---|
| **கிரயத்தில்** | 413,001 | 12,153,192 | - | 29,191,969 |
| | | **12,153,192** | **-** | **29,191,969** |

**21.1** மஹரகம நாவின்ன பழைய கோட்டை வீதியின் 135/1 வரையறுக்கப்பட்ட ஸகொயர் மெக் என்ஜினியரிங் (தனியார்) நிறுவனத்துடன் கொழும்பு கொமர்ஷல் உரங்கள் தனது தலைமை அலுவலகத்தை அதே பகுதியில் நிர்மாணித்துக்கொள்வதற்காக ரூபா 44.4 மில்லியன் தொகைக்கு ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தது.

**21.2** கொழும்பு கொமர்ஷல் உரங்கள் அதே பகுதியில் ஓர் களஞ்சிய அறையை நிர்மாணித்துக்கொள்வதற்காக வேறோர் நிர்மாண ஒப்பந்தத்தை கொழும்பு 07 இல் உள்ள மத்திய பொறியியல் பணியகத்துடன் ரூபா 51.6 மில்லியன் தொகைக்கு ஏற்படுத்தியிருந்தது.

## 22. நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் வகை

நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் கொண்டு செல்லல் பெறுமதி பின்வருமாறாகும்.

| | 2013 | 2012 | 01 ஏப்ரல் 2011 இல் உள்ளவாறானது |
|---|---|---|---|
| **கடன்களும் பெறவேண்டியவைகளும்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் குறிப்பு 24 | 11,960,848,352 | 9,671,176,077 | 12,947,440,049 |
| ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் குறிப்பு 26 | 11,401,972 | 15,017,379 | 582,290 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் குறிப்பு 28 | 294,331,756 | 464,694,252 | 436,672,463 |
| காசு மற்றும் காசிற்குச் சமனானவை குறிப்பு 29 | 335,262,627 | 296,093,770 | 515,797,182 |
| | **12,601,844,708** | **10,446,981,477** | **13,900,491,983** |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | | | **13,900,491,983** |
| கடன்களுக்கான வட்டி குறிப்பு 37 | | | 11,632,420,057 |
| வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் குறிப்பு 36 | | | 4,356,136,052 |
| பெற்ற வைப்புகளும் முற்பணங்களும் குறிப்பு 38 | | | 23,576,321 |
| **மொத்த நிதிப் பொறுப்புகள்** | | | **16,012,132,429** |

***(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)***

| | | 31.03.2013 | 31.03.2012 | 01.04.2011 இல் உள்ளவாறானது |
|---|---|---|---|---|
| **23** | **பதிவுப் பொருட்களும் ஏனைய நுகர்வுப் பொருட்களும்** | | | |
| **23அ** | **பதிவுப் பொருட்கள்** | | | |
| | உரம் | 173,460,034 | 144,605,717 | 180,490,161 |
| | பொதி செய் பொருட்கள் | 2,876,816 | 7,526,984 | 4,418,008 |
| | | 176,336,851 | 152,132,701 | 184,908,169 |
| **23ஆ** | **ஏனைய நுகர்வுப் பொருட்கள்** | | | |
| | பொதுக் களஞ்சியப் பொருட்கள் | 7,077,899 | 12,180,371 | 10,939,019 |
| | காகிதாதிகள் | 1,234,320 | 1,471,309 | 910,748 |
| | | 8,312,219 | 13,651,681 | 11,849,767 |
| | | **184,649,069** | **165,784,382** | **196,757,936** |
| **24** | **வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்** | | | |
| | **வியாபாரப் பெறவேண்டியவைகள்** | **53,144,673** | **57,192,064** | **60,939,307** |
| | கழி: பெறப்படாத வியாபாரப் பெறவேண்டியவைகளின் | 31,732,394 | 31,432,070 | 29,752,883 |
| | | **21,412,279** | **25,759,994** | **31,186,423** |
| | **தேறிய வியாபாரப் பெறவேண்டியவைகள்** | **21,412,279** | **25,759,994** | **31,186,423** |
| | ஏனைய வியாபாரப் பெறவேண்டியவைகள் | 11,939,436,073 | 9,645,416,083 | 12,916,253,625 |
| | | **11,960,848,352** | **9,671,176,077** | **12,947,440,049** |

2013 மார்ச் 31 இல் உள்ளவாறான வியாபாரப் பெறவேண்டியவைகள் தொகையான ரூபா 3,185,534 (2011/12) ரூபா 3,185,534 மற்றும் 2010/11 : ரூபா 3,202,514) நீண்ட கால நிலுவையான போதிலும் அவை பெறப்படாத வகையிலானவை அல்ல. இவை முக்கிய வாடிக்கையாளர்களாவதுடன் இவர்களிடமிருந்து தனித்தனியாக பெறப்படாத நிலைக்கான மீளாய்வுகள் நடாத்தப்பட்டு அறிக்கை ஆண்டுகளில் பெறப்படாத வகையிலானதற்கு நம்பத்தகுந்த சான்றுகள் அற்றவையாகும்.

வியாபாரப் பெறவேண்டியவைகளின் காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்

| | | | |
|---|---|---|---|
| 3 மாதங்கள் வரை | 127,996 | 2,555,447 | 9,757,520 |
| 3 முதல் 6 மாதங்கள் | - | - | - |
| 6 முதல் 12 மாதங்கள் | - | - | - |
| ஒரு வருடத்திற்கு மேல் | 53,016,677 | 54,636,617 | 51,181,787 |
| | **53,144,673** | **57,192,064** | **60,939,307** |

வியாபாரப் பெறவேண்டியவைகளின் பெறப்படாத நிலை பரீட்சிக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட முடியாத சில வியாபாரப் பெறவேண்டியவைகள் பெறப்படாத நிலையிலான வியாபாரப் பெறவேண்டியவைகளாகக் கருதப்பட்டு குறிப்பு 3.7 இல் குறிப்பிடப்பட்ட அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| **வியாபாரப் பெறவேண்டியவைகளின் விபரம்** | **31.03. 2013** | **31.03,2012** | **01 04. 2011 இல் உள்ளவாறானது** |
|---|---|---|---|
| பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் | (98,503) | - | - |
| விவசாயிகள் சங்கம் | 83,595 | 83,633 | 133,572 |
| கமநல சேவை நிலையங்கள் | 7,505,832 | 11,354,334 | 15,622,960 |
| அரசாங்கத் திணைக்களங்கள் அரச நிறுவனங்கள் | 9,285,861 | 9,307,546 | 9,324,476 |
| அங்கீகரிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் | 36,367,889 | 36,446,551 | 35,858,300 |
| | **53,144,675** | **57,192,064** | **60,939,308** |

அடைப்புக் குறிக்குள் உள்ள தொகை கழிப்பனவுகளைக் குறிக்கும்.

**(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)**

| | | **31.03. 2013** | **31.03,2012** | **01 04. 2011 இல் உள்ளவாறானது** |
|---|---|---|---|---|
| **24.1** | **ஏனைய பெறவேண்டியவைகள்** | | | |
| | பொதுத் திறைசேரியிலிருந்து – நெல் மானியம் | 11,657,075,690 | 9,580,671,560 | 12,810,345,675 |
| | பொதுத் திறைசேரியிலிருந்து – வட்டி | 262,751,752 | 46,169,602 | 74,319,183 |
| | வரையறுக்கப்பட்ட கப்பல் கூட்டுத்தாபனம் | 1,356,447 | 1,613,008 | - |
| | வரையறுக்கப்பட்ட இலங்கை உர கம்பனி | - | - | 7,348,884 |
| | வரையறுக்கப்பட்ட ஈரீஏ லங்கா (தனியார்) | - | - | 7,269,820 |
| | குறும் விநியோக கோரல் கணக்கு | - | 16,399,006 | 16,399,006 |
| | கடன்பட்டோர் தலைமை அலுவலகம் | - | - | 328,130 |
| | பெவேண்டிய வாடகை | 118,367 | 47,184 | 147,959 |
| | சீசீஎப் நலன்புரிச் சங்கம் - கடன் | 20,000 | 20,000 | 37,500 |
| | வாகன விபத்து இழப்பு அறவீட்டுக் கணக்கு | - | - | 42,218 |
| | நிலையான வைப்பு வட்டி - பெறவேண்டியவை | 18,113,817 | 16,894,729 | 16,414,256 |
| | | 11,939,436,073 | 9,661,815,089 | 12,932,652,631 |
| | பெறப்படாத வகையிலான குறும் கோரல் | - | (16,399,006) | (16,399,006) |
| | | **11,939,436,073** | **9,645,416,083** | **12,916,253,625** |

| | | | | |
|---|---|---|---|---|
| **25** | **பெறவேண்டிய நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்** | | | |
| | பொருளாதார சேவைக் கட்டணங்கள் | - | 2,394,734 | 2,675,239 |
| | | - | **2,394,734** | **2,675,239** |

**திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகள்**

திறைசேரி உண்டியல்கள் மீது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 6,421,801 தொகையான முதலீடுகள் (2012 - ரூபா 8,996,424 , 2011 - ரூபா 7,418,966) பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்காக வெவ்வேறாகப் பேணப்பட்டிருந்தன.

**26 ஊழியர் கடன்களும் முற்பணங்களும்**

| | | | |
|---|---|---|---|
| இடர் கடன்கள் | - | 3,877,186 | 3,877,186 |
| புதிய இடர் கடன்கள் | 10,840,622 | 14,378,339 | - |
| விழா முற்பணம் | 496,350 | 567,040 | 517,290 |
| விசேட கடன் : | 65,000 | 86,200 | 86,200 |
| சம்பள முற்பணம் | - | 7,000 | - |
| | 11,401,972 | 18,915,765 | 4,480,676 |
| பெறப்படாத வகையிலுள்ள ஊழியர் கடன்கள் | - | (3,898,386) | (3,898,385.95) |
